வேண்டும் விடுதலை!

"ஆண்டுநூ ருனுலும்
அன்னைத் தமிழ்நாடு
வேண்டும் விடுதலை
எண்ணம் விலக்கோம்யாம்;
பூண்டோம் உறுதி!
புறப்பட்டோம்" – என்றேநீ
முண்ட இடியாய்
முழங்காய் தமிழ்மகனே!

இரட்டை (ஆனி)

தி.பி. ௧௯௯௭.

தென்மொழி

த்தமிழ் இலக்கியத் திங்க



"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

சுவடி 4 | ஆனி தி. பி. ககூகூஎ (1966 சூன்) | ஓலை 5

தமிழகம் பிரிதலே தக்கது

இந்தியா எக்காலத்தும் அரசியலில் ஒன்றிய தனி ஒரு நாடாக இருந்ததில்லை. மிகப் பழங்காலத்தில் இந்நாடு ஐம்பத்தாறு தேசங்களாகவும். அதன்பின் 1947 வரை 632 சிறு நாடுகளாகவுமே பிரிக்கப்பட்டுத் தனித்தனி ஆட்சிக்கு உட்பட்டு வந்திருக்கின்றது. ஏறத்தாழ முப்பத்து மூன்று கோடி மக்கள் உடைய முன்னைய இந்தியாவே 632 நாடுகளாகப் பிரிந்து தனித்தனி ஆட்சி ஏற்படுத்திக்கொண்டு வாழ்ந்ததென்றால் (1961 மக்கள் கணக்குப்படி) 43·9 கோடி மக்கள் உள்ள இன்றைய இந்தியா தன் ஆட்சி முறையில் ஒன்றியிருக்க வேண்டும் என்பதும், அதனால் பல நன்மைகள் விளையுமென்பதும் அறியாமையாகும். அவ்வாறு இருப்பது பெரும்பான்மையான ஓர் இனத்தின்

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரன்.
உறுப்பாசிரியர் : தங்கப்பா.
உரிமை, வெளியீடு : தாமரை, உலகமுதல்வி.
தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.

அல்லது ஒரு மொழியின் தனிப்பட்ட வல்லாண்மைக்கே அடிகோலுமே யன்றி எந்த அரசியல் சட்ட அமைப்பாலும் அதிகாரத்தாலும் நாட்டுக்கு நன்மையாக விளைந்துவிடப் போவது இல்லை. இந்நிலை இப்படியே இருக்குமானால் இந்தியா முழுவதும் ஊடுருவியுள்ள ஓர் இனமோ ஒரு மொழியோதான் இந்நாட்டை ஆண்டு கொண்டிருக்க முடியும். குறிப்பாகச் சொன்னால் இக்கால் விளையும் எல்லாவகையான அரசியல் குமுகாயப் பொருளியல் தோல்விகளுக்கெல்லாம் இவ்வடிப் படையான – பிழையான அரசியல் அமைப்புத்தான் காரணம் ஆகும். இந்தியா தன்னாட்சி பெற்ற இப்பதினெட்டாண்டுக் காலத்தில் பேராயக் கட்சியன்றி வேறு எந்தக் கட்சி இந்திய ஆளுமையைக் கைப்பற்றி இருந்தாலும், அதுவும் இந்தியாவை இந்த நிலைக்குத்தான் – இன்னுஞ் சொன்னால் இதைவிட மிகக் கீழான நிலைக்குத்தான் கொண்டு சேர்த் திருக்கமுடியும் என்பதைத் திட்டவட்டமாகக் கூறலாம். வெள்ளை யனே தன் வல்லதிகாரத்தால் செம்மைப் படுத்த வியலாத இவ்விந்திய ஒருமைப்பாட்டை இங்குள்ள ஓரிரு அரசியல் காயாட்டக்காரர்கள் தம் பதற்றப் போக்காலும் ஆட்சி வெறியாலும் ஏற்படுத்திவிடக்கூடும் என்று காண்கின்ற கனவு என்றும் நிறைவேற முடியாது. அந்நிலை பூனை வளர்க்கத் தெரியாதவன் யானையை வளர்க்க விரும்பியது போலாகும். மொழியாலும், இனத்தாலும், சமயத்தாலும், குலத் தாலும், பண்பாட்டாலும் பலவகையாகப் பகுக்கப்பட்ட இந்தியா போன்ற ஒரு பெரிய நாட்டில் இப்பிரிவுநிலை தவிர்க்க முடியாததும் இயற்கையுமே ஆகும். பிரிவற்ற ஒரு நிலை இந்நாட்டு முன்னேற்றத் திற்கும் ஒருமைப் பாட்டிற்கும் என்றும் வழி வகுத்துவிட முடியாது. இன்னும் ஆயிரம் ஆண்டுகள் போயினும் இந்தியாவின் ஒரு மூலையில் மொழியெழுச்சியும், இனவெழுச்சியும், பண்பாட்டு எழுச்சியும், சமய வெழுச்சியும் தோன்றித் தோன்றி அவ்வக்கால் ஏற்பட்டு வருகின்ற சிறியளவு பயன்களையும் அரித்து வருமேயன்றி, ஓர் அமைதி நிறைந்த சூழலையோ அரசியல் முன்னேற்றத்தையோ ஏற்படுத்திவிட முடியா. பிரிவு மனப்பான்மையால் வருகின்ற முடிவன்று இது. உலகவியற்கை யினையும், மக்களின் உரிமை வேட்கையினையும், அரசியல் அறிவு விரிவையும் அடிப்படையாகக் கொண்டு கணிக்கின்ற உண்மையே இது.

ஏறத்தாழ 43·9 கோடி மக்களுள்ள இந்தியாவில் ஏறத்தாழ 165 மொழிகள் வழங்கி வருகின்றன. இவற்றுள் அரசியல் மொழிச்சட்டத் தில் உள்ள அசாமி, உரியா, உருது, இந்தி, கன்னடம்

காசுமீரி, குசராத்தி, தமிழ், தெலுங்கு, பஞ்சாபி, மராட்டி, மலையாளம், வங்காளம், சமற்கிருதம் முதலிய 14 மொழிகளையும் ஏறத்தாழ 38 கோடி மக்கள் பேசுகின்றனர். இவற்றுள் சமற்கிருதத்தை மட்டும் 1951–ஆம் ஆண்டு மக்கள் கணக்குப்படி 555 பேர்களும் 1961-ஆம் ஆண்டு மக்கள் கணக்குப்படி 2666 பேர்களும் பேசிவருவதாகக் கணக்கிட்டிருக்கின்றனர். அவ்வாறு இருந்தும் இம்மொழியும் மற்ற 13 மொழிகளுடனும் சேர்த்து எண்ணப்படுவது, இக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பெற்ற ஊடுருவல் சூழ்ச்சியால் நேர்ந்த விளைவு ஆகும். இவ்வூடுருவல் இன்றைய நிலையில் எந்த அளவு வளர்ந்திருக்கின்றது என்றால் "சமற்கிருதம் வழக்கிழந்த ஒரு மொழியன்று" என்று திரு. சி. பி. இராமசாமி அவர்கள் பேசுமளவிற்கும், "சமற்கிருதம் அழிந்துவிடுமானால் இந்தியாவிலுள்ள எல்லா மொழிகளும் அழிந்துவிடும்" என்று அண்மையில் கூடிய சமற்கிருதமொழிக்குழு கூறுகின்ற அளவிற்கும் என்று கூறவேண்டியுள்ளது. எனவே இந்தியா ஒரு பெரிய நாடாகவே இயங்குமானால் தென்னாட்டுப் பகுதிகளில் தென்னாட்டுப் பார்ப்பனர்களும், வடநாட்டுப் பகுதிகளில் வடநாட்டுப் பார்ப்பனர்களும்தாம் மேலோங்கி நின்று இங்குள்ள மற்ற பெரும்பான்மை மக்களை அடிமைப்படுத்திக் கொண்டிருக்க வேண்டியிருக்கும் என்று வெளிப்படையாகக் கூறலாம். இவ்வடிப்படை உண்மையை இனி வரப்போகும் இந்தியாவில் உள்ள எந்தக் கட்சியின் ஆட்சியும் மாற்றிவிட முடியாது என்பதைத் திட்டவட்டமாகக் கூறலாம்.

பேராயக் கட்சியில் திரு. காமராசரின் கை ஓங்கியிருப்பது போலத் தோன்றினாலும், உள்ளூர நடைபெறும் பலவகையான ஆட்சி அரிப்புகளில், தமிழர்கள் – குறிப்பாகத் தென்னாட்டு மக்கள் தென் பகுதி வடபகுதிப் பார்ப்பனர்களுக்கு ஏதோ ஒரு வகையிலேனும் அடிமைப்பட்டுத்தான் கிடக்க வேண்டியிருக்கின்றனர். தமிழகத்திற்கு வந்து வாய்த்த அடிமை நிலைகளோ சொல்லுந்தரமல்ல. மொழியாலும், இனத்தாலும், சமயத்தாலும், இன்றையத் தமிழன் மிகக் கீழான நிலையில் தனக்குற்ற அடிமை நிலையினைக்கூட உயர்வு என்று நினைக்கும் அளவிற்கு — அறியாமை அடிமையாகக் கிடந்து உழல்கின்றான். இங்குள்ள அரசியல் கட்சிகளும் கூட அவ்வறியாமை அடிமைகளின் கூட்டமாகவே இயங்கிவருகின்றனவேயன்றி, தம் தம் வல்லடிமைப் போக்கை அடியூன்ற உணர்ந்து அறிந்து அதினின்று தேர்ந்து தெளியுமாறில. எனவே இன்றிருத்தல் போல இன்னும்

எத்தனை ஆண்டுக் காலமாயினும், இப்பொழுதுள்ள காமராசர் போல் இன்னும் எத்தனை காமராசுகள் வந்தாலும் இந்தியாவின் ஆணி வேருடன் ஊன்றப்பட்டுக் கிடக்கும் இவ்வுண்மையான ஒற்றுமையற்ற-ஆண்டான் அடிமைப் போக்கை மாற்றிவிடவே முடியாது. அடங்கி அடங்கித் தலையெடுக்கும் இச்சிக்கலால்தான் இந்தியா இத்தனை அளவு கடன் பட்டும், பொருள்களையும் உழைப்பையும் செலவிட்டும் அகப்புற விளைவுகளில் நசித்துக்கொண்டே உள்ளது. ஊன்றிக் கவனிப்போர் இந்தியாவின் இன்றையக் குமுகாயத் தோல்வியினை உணராமற் போகார்.

மேலே குறிப்பிட்ட இயற்கைக் குறைபாடன்றிச் செயற்கைக் குறைபாடுகளும் இந்தியாவின் ஒருமைப்பாட்டு எண்ணத்தால் செழித்து வளர்ந்து வருகின்றன. தமிழர்களின் வாழ்விற்கு மிக இன்றியமையாமை என்று கருதும் ஒன்று வடவரின் வாழ்விற்குத் தேவையற்ற ஒன்றுகப் பட்டுத் தூக்கியெறியப் படுகின்றது. நடைமுறைப் பழக்க வழக்கங்களிலும், மொழியீடுபாட்டிலும் தமிழர்கள் அல்லது தென்னுட்டவர்கள் வடவர்களால் புறக்கணிக்கப் பட்டவர்களாகவே இருக்கின்றுர்கள். வடநாட்டில் வழங்கும் இந்தி மொழி மட்டும் தென்னுட்டு மக்களை அடிமைப் படுத்த முற்படவில்லை. அங்கு விளையும் கோதுமை கூட, தென்னுட்டு அரசியினை அகற்றப் பாடுபடுகின்றது! அரசியல் ஒருமைப் பாட்டிற்காகச் செய்யப்பெறும் முயற்சிகள் அத்தனையும் தென்னுட்டு மக்களுக்குத் தீங்காகவும், இவர்களைத் தாழத்துவதாகவுமே அமைந்திருக்கின்றன. இக் கொடுமையை நெடுநாட்களுக்குப் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. தொடக்கத்தில் அரசியல் அமைதிக்காக ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவும் உலக ஒற்றுமைக்காக ஒப்புக் கொள்ளக் கூடியதாகவும் இருக்கும் சிற் சில சீர்திருத்தங்கள் கூட, முடிவில் ஓரின அழிவிற்கும் வளர்ந்து முழுமைப்பட்ட ஒருவகைப் பண்பாட்டின் வீழ்ச்சிக்கும், சிறந்து நிறைவு கொண்ட ஒரு மொழியின் தாழ்ச்சிக்கும் அடிகோலுவனவாகவே அமைகின்றன. இவையன்றி ஆளுமைத் தொல்லைகளும் பலவாகிப் பெருகி அடிப்படைக் கொள்கையையே ஆட்டி அசைக்கின்றன. தமிழகத்தில் நடைபெறவிருக்கின்ற ஒரு செயலிற்கு, வடநாட்டார் இசைவைப் பெறவேண்டியுள்ளது. இங்கு செய்யத்திட்டமிடும் ஒரு வாணிகத்திற்குத் தில்லியின் கடைக்கண் பார்வை வேண்டியிருக்கின்றது. மதுரையிலிருந்து சென்னைக்கு விடுக்கப்பெறும் ஓர் [illegible]வில் [illegible] வேண்டிய [illegible]ர் உருவத்தை வடநாட்டினர் தேர்ந்

தெடுக்க வேண்டி உள்ளது. தென்னாட்டு மக்களுக்காக உழைக்கின்ற அரசியல், அல்லது குமுகாயவியல் தலைவர்களின் வாய்களை வட நாட்டினர் தம் கைகள் திறந்து மூடவேண்டியுள; குமரி முனையில் நடத்த விருக்கும் ஒரு தாளிகையின் பெயரைக்கூட தில்லியில் தமிழ் தெரியாத-தமிழ்ப் பற்றில்லாத-தமிழ்ப் பண்பாட்டிற்கு மதிப்பளிக்காத ஒரு வடநாட்டான் தேர்ந்தெடுத்துக் கொடுக்கவேண்டியுள்ளது. இங்கிருக்கும் சூழல், பண்பாடு, மொழி முதலியவற்றை அங்குள்ள ஒருவன் கணித்து நல்லதைச் செய்துவிட முடியும் என்று எவ்வடிப் படையில் கருதப்படுகின்றதோ நாம் அறியோம். வடநாட்டுத் தாளிகை களின் பெயர்களை இங்குள்ளவர்கள் தேர்ந்தெடுப்பதை அங்குள்ளவர்கள் ஒப்புக்கொள்ளுவார்களா? இவ்வாறு சிறிய சிறிய செயல்களிலெல்லாம் தமிழர்—அல்லது தென்னாட்டவர் தம் அறிவையும், ஆற்றலையும், வடவர்க்கு விட்டுக் கொடுக்க வேண்டியுள்ளது. அவ்வாறு விட்டுக் கொடுத்தாலும் இங்குள்ளவர்கள் அவர்களின் முழு இசைவைப் பெறத் தவங்கிடக்கவேண்டியுள்ளது. செயலுக்கும் காலத்திற்கும் ஒத்துவராத இவ்வொருமைப் பாட்டின் அமைப்புக்கு இத்தனைத் துயரமும் பட்டு, தன்மானத்தையும் விட்டுக்கொடுத்தான் ஆகவேண்டுமோ?

இங்குள்ள திருக்குறளை அறநூலாக ஒப்புக் கொள்ளும் வடநாட்டினர் எத்தனைப் பெயர்? இங்குள்ள பாரதிதாசனை ஒரு புலவராக மதிக்கும் வடநாட்டுப் புலவர்கள் எத்தனைப் பெயர்? இங்குள்ள வரலாற்றை அங்குள்ள வரலாற்றோடு பொருத்தி எழுதும் வடநாட்டு வரலாற்றாசிரியர்கள் எத்தனைப் பெயர்? இத்தனை ஏன்? இக்கால் தேசிய ஒருமைப்பாட்டிற்கு வித்தூன்றியவராக இங்குள்ளவர்கள் பீற்றிக் கொள்ளும் பாரதியாரை அங்கிருக்கும் எத்தனைப் பெயர்கள் மதித்துப் போற்றுகின்றனர்? எந்தத் துறையிலும் இங்கிருக்கும் தமிழர்களில் ஒருவராகிலும், அல்லது இங்கு நடைபெறும் ஒரு செயலாவது அங்குள்ளவர்களால் மதிக்கப் பெறுவதற்காக எவராகிலும் தெரிவுபட எடுத்துக் காட்டமுடியுமா? காமராசர் ஒருவரைக் காட்டி — அதுவும் அவர் அடிமைத்தனம் தங்களுக்கெல்லாம் ஒரு பெரிய துணையாக இருக்கின்ற காரணத்தை மனத்திற்கொண்டு — வடநாட்டினர் எத்துணை விழிப்பாகத் தங்கள் நலங்களையும், இனங்களையும், மொழியினையும் வளர்த்துக் கொண்டிருக்கின்றனர் என்பதை இங்குள்ள அடிமைத் தமிழர்கள் உய்த்துணர்ந்து அறிந்துகொள்ளுதல் வேண்டும்—

மொத்தத்தில் இந்தியாவில் 96·3 இலக்கம் மக்களுக்கே தெரிந்த இந்தி மொழி, இங்குள்ள 44 கோடிப் பேர்களின் வாயிலும் நுழையத்தான் வேண்டும் என்றும் அவர்கள் இட்ட ஆணை ஒன்றே – அமைத்துக் கொண்ட சட்டம் ஒன்றே தென்னாட்டவர்களுக்கு வடநாட்டவர்களால் என்றென்றைக்கும் தீங்கே என்பதைத் தெளிவாகப் புலப்படுத்துகின்ற தல்லவா?

இந்த நிலையில் இங்குள்ள தந்நலக்காரர் ஒருசிலரின் நல்வாழ்விற் காக, ஒருசிலர் பெறும் பட்டம் பதவிகளுக்காக, இங்கிருக்கும் நான்கு கோடித் தமிழரும் (இக்கணக்கும் பிழையே. இதுவும் அவர்கள் கணித்ததே!) தம் வாழ்வு நலன்களையும், மொழி நலன்களையும், தன்மானத்தையும் விட்டுக்கொடுக்கத்தான் வேண்டுமென்பது எத்துணை மடமையும், ஏமாளித் தன்மையுமாகும். இச்சூழ்நிலைகள் எல்லாம் மாறவேண்டுமானல் இங்குள்ள ஒருசிலர் பதவியினின்றிறங்கி, வேறு சிலர் அரசியல் அதிகாரம் பெற்றுவிடுவது மட்டும் போதாது. தமிழக அரசியல் அதிகாரத்தை எந்த ஓர் எதிர்க்கட்சி கைப்பற்றினுலும் நிலைமை இதுவாகத்தான் இருக்க முடியும். வேண்டும் பொழுது அர சியல் அதிகாரத்தையோ, சட்ட அமைப்புகளையோ உடனுக்குடன் மாற்றிக்கொள்ள முடியுமாறு, பாராளுமன்றப் பெரும்பான்மை பெற்ற வடநாட்டினரின் ஆட்சியமைப்பை, தனிப்பட இயங்க வல்லமையற்ற தும், சட்ட வரம்புக்குட்பட்டதும், எந்த நேரத்திலும் விலக்கலுக்கு உட்படுவதுமான இம்மாநில ஆட்சியின் முனைமுறிந்த அதிகாரம் இங் குள்ளவர்களின் நன்மைக்கும், தன்மானக்காப்பிற்கும் என்றும் பக்கத் துணையாக இருந்துவிட முடியாது என்பது அரசியல் நுணுக்கமறிந்த வர்களுக்குத் தெளிவான உண்மையாகும்.

மாநில அரசாட்சி மாற்றம் மட்டுமே மாநில உரிமைக்காப்பிற்குத் துணையாக அமைந்துவிட முடியாது என்ற நிலை சட்ட அடிப்படை யில் ஆணியறைந்து வைக்கப்பட்டிருக்கும் பொழுது, நாம் ஏன் இன்னும் அரசியல் நாடக அரங்கில் நடக்கும் வெறும் உப்புச்சப்பற்ற நடிப்புகளிலேயே மயங்கிக் கிடக்கவேண்டும்? எவ்வாற்றுனும் வட நாட்டுப் பிடிப்புகளிலிருந்து தமிழகம் தன்னை விடுவித்துக்கொள்ள முயலுவதே அறிவுடைமையும், சரியானதும், காலத்தால் செய்யப்பட வேண்டிய செயலும் ஆகும் என்பதை இங்குள்ள தமிழர் ஒவ்வொரு வரும் உணர வேண்டும். நம் நிலைகளை நாமே வரையறுத்துக் கொள்ளும் உரிமையை நாம் பெற்றாலன்றி நாம் நினைக்கின்ற எந்தச்

சீர்திருத்தத்தையும் அரசியலிலோ, பொருளியலிலோ, குமுகவியலிலோ செய்துவிடமுடியாது. சிறுவினைகட்கும் மக்கள் ஆற்றலைத் திரட்டுவதும், அதனைக்கொண்டு வடவரை மிரட்டுவதும், அவர்கள் காவலர்களையும் பட்டாளப் படைகளையும் வைத்துக்கொண்டு வெருட்டுவதும், அதற்காகப் பலகோடி உருபாக்களைச் செலவிடுவதும் இந்நாட்டிற்கும் மக்களுக்கும் துளியும் நன்மை பயவா. இருக்க இருக்க மனச் சோர்வும் வாழ்வு அயர்ச்சியும் இவற்றால் ஏற்படுமேயன்றி, வெளிநாட்டினர் ஒரு சிலரைப்போல் ஒப்பற்ற உரிமை வாழ்வையும், அச்சமற்ற அரசியல் நடைமுறைகளையும் அமைத்துக்கொள்ளவே முடியாது. கால் கைகளின் கட்டுகளை அவிழ்த்துப் போட்டுவிட்டுத் தலைக் குடுமியை மட்டும் பிறருடைய கைகளில் நாம் தந்து கொள்ளுவது எவ்வாற்றானும் விடுதலை ஆகிவிடாது. எந்த நலத்தைக் கருதி நாம் அவ்வாறு நம்முடைய குடுமிகளைத் தந்துகொண்டாலும் அது நம்மின் அறியாமையையே காட்டும்; நமக்குத் தாழ்வு வழியையே காட்டும்!

'துறக்க(சொர்க்க)மே என் சிறையாக அமைந்தாலும், நான் அதைத் தாண்டிக் குதித்து விடுதலை பெறவே விரும்புவேன்' என்று கூறும் விடுதலை எண்ணம் தமிழர்களுக்கு ஏற்பட வேண்டும். நாம் இப்படிக் கூறுவதால் இந்தியாவின் அரசியல் நலத்திற்கு எந்த வகையிலும் ஊறு நினைப்பதாகக் கருதிவிடக் கூடாது. இந்தியாவைப் பல சுற்றுச்சுவர்களால் குறும்பிரிவுகளாகப் பிரித்துவிடவேண்டும் என்பது நம் எண்ணமன்று. ஒவ்வொரு மாநிலமும் தனியாட்சி பெற்று இந்தியக் கூட்டரசாக இயங்கவேண்டும் என்பதே நம் கொள்கை. ஒவ்வொரு மாநிலத்தின் நன்மை தீமைகளும் அவ்வம் மாநில ஆட்சியமைப்பைப் பொறுத்தே அமையவேண்டும். மொழிவழியாகப் பிரிக்கப் பெற்றுத் தன்னாட்சியுரிமை யெய்திய கூட்டுக் குடியரசில் வேற்றுமைகளுக்கே துளியும் இடமில்லை. ஒவ்வொரு நாட்டுப் படைகளும் சேர்ந்து உலக ஒன்றிப்பு அவையின் நடுநிலைப் படைகளை அமைத்தல் போல், இந்தியாவில் உள்ள ஒவ்வொரு மாநிலத்தின் படைகளும் சேர்ந்து – சம தொகையினதாக ஒருபெரும் இந்தியப் படையினை ஏற்படுத்தி அதன் புறக்காப்பை வலுப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். இதுவன்றி அவ்வம்மாநிலங்களில் நிகழும் எல்லாவகையான அரசியல், பொருளியல், குமுகாயவியல் மாறுபாடுகளும் அவ்வம்மாநில அதிகார வரம்பிற்கு உட்பட்டனவாகவே அமைதல் வேண்டும்.

தமிழகத்தில் ஓடும் தொடர்வண்டி, அஞ்சல் இயக்கம், கல்வி யமைப்பு, தொழில் விளைவு முதலியன யாவும் தமிழக அரசையே சார்தல் வேண்டும். தேவையானால் ஒரு மாநிலத்தின் மிகையான விளைவு மற்ற மாநிலத்தின் குறைவான விளைவைச் சரிகட்டுவதற்கு ஏற்ப ஒப்பந்தம் செய்துகொள்ளல் வேண்டும். இங்கு நடைபெறும் எந்த ஒரு செயலுக்கும் திருத்தத்திற்கும் இங்கு அமைக்கப்பெறும் அரசையே முழுப்பொறுப்பாக்க வேண்டும். அப்பொழுதுதான் மாநில அரசு தனக்கு மேலுள்ள அதிகாரத்தைக் காட்டித் தப்பித்துக்கொள்ளல் இயலாது. இம்முறையால் ஒரு மாநிலத்தின் ஆக்கமும் கேடும் ஆங்குள்ள மக்களின் அறிவையும், சுறுசுறுப்பையும், உழைப்பையும் பொறுத்தனவாகலின், எல்லா மாநிலத்தவரும் பொறுப்புணர்ந்து எல்லாத் துறைகளிலும் மெய்யாக ஈடுபடுகின்ற ஒரு போட்டித் தன்மையை உண்டாக்கிக்கொண்டு முன்னேற வாய்ப்பிருக்கும். ஒரு மாநிலத்தவர் அண்டை அயல் மாநிலத்திற்குச் செல்லுவதும் அங்குள்ள நடைமுறைகளில் ஈடுபடுவதும் இருமாநிலத்தவரின் விருப்பத்தையும் இசைவையும் பொறுத்தவாக அமைய வேண்டும். இவையன்றி இன்னும் பல விரிந்த அமைப்புகளையும் ஒழுங்குபட, இந்தியத்துணைக் கண்டத்தின் நன்மைக்கு ஊறு விளையாவண்ணம் ஏற்படுத்திக் கொள்ளலாம்.

உலகம் இக்கால் மெச்சிப் பேசும் குடியரசுமுறை எல்லா வகையிலும் இப்பொழுதுள்ளபடியே இருந்துவிட வேண்டும் என்பது உலக அறிஞர்களின் கருத்தன்று. முடியரசு முறையில் எப்படிப் பல தீமைகளும் இயலாமைகளும் இருந்தனவோ அவ்வாறே குடியரசிலும் தீமைகளும் இயலாமைகளும் இருக்கவே செய்கின்றன என்பதே அவர்தம் கருத்தாகும். எனவே இப்பொழுதுள்ள முறையை இப்படியே வைத்துக் கொள்ளுவதுதான் சிறந்ததென்று கூறமுடியாது. அதிலும் காலப் போக்கில் பல திருத்தங்களைச் செய்தே ஆகவேண்டும். அதன் முடிவு நாம் கூறிய மொழியுரிமைத் தன்னாட்சிக்குத்தான் வித்தாகும் என்பதை எவரும் மறுத்துவிட முடியாது. அப்படிப்பட்ட ஒரு சூழலுக்கு நாம் வலிந்துகொண்டு செல்லப்படுமுன் நாமே அச்சூழலைத் திருத்தமான முறையில் வரவேற்றுக் கொள்ளுவது தாழ்வோ பிழையோ ஆகிவிடாது. எனவே தமிழக விடுதலை தேவையான, இன்றியமையாத ஒன்று! பிற மாநிலங்களும் தன்னாட்சி பெற வேண்டும் என்பதும் நம்மெண்ணம். இதுபற்றிப் பிறிதொருகால் இன்னும் விளங்கப் பேசுவோம்.

—பெருஞ்சித்திரன்.



துரை-மாணிக்கம்

(5)

அவனே செம்மல்! இளமான் தோன்றல்!
கவ்வும் கலைவிழி! கற்பனை உள்ளம்!
இளநகை மொய்க்கும் ஈரிதழ் கனிவாய்!
வளம்படு நெடுந்தோள் வடித்தகூர் மூக்கு!
எடுத்த பெருநடை! இனியநேர் நோக்கு!
படுத்துப் புரளும் பரந்தநல் மார்பு!
காளையின் மொய்ம்பு! களிற்றின் பெருமிதம்!
வாள்நெடுங் கண்ணிக்கு வந்தநல் விருந்தாய்
அவனெதிர்ப் பட்டான்! ஐயையும் அத்தையும்
துவளா நடையினன் தூக்கிய பொருள்களை
ஓடி வாங்கி உட்குடில் வைத்தனர்!
தேடிய செல்வம் திரண்டுமுன் வந்ததால்
ஐயை உள்ளமும் ஆவியும் அன்பும்
மெய்ம்மலி யுவகையும் மீளக் கண்டாள்!
இடையிடை நடந்த இவள்நெடுங் கண்களும்
அடையா இமைகளின் அழகியோன் கண்களும்
எதிரெதிர்ப் பட்டுத் தெறித்தன! ஏந்திழை
புதிரென் இளமைக்குப் புதுப்பொருள் கண்டாள்!

ஆமடி வற்றக் கறந்தவர்க் களிப்பதும்
தூமலர் கொய்து மாலை தொடுப்பதும்,
ஆட்டு மறியினை அன்போ டணைப்பதும்,
கோட்டிலை வாங்கால் தழைகள் குவிப்பதும்,
தண்டைச் சிலம்பொலி தாவிட நடப்பதும்,
கொண்டையும், பனிச்சையும் குழலும் பின்னலும்
என்று பலவா றிருங்குழற் புனைவதும்,
நின்றவன் நகர்க்கதை நிகழ்த்தக் கேட்பதும்,
கற்றவை அவன்பால் கருத்தொடு மடுப்பதும்,
குற்றுநெல் புடைப்பதும், குறும்பா விசைப்பதும்
பண்ணியம் பலவும் பண்ணி அன்போ
டுண்ணக் கொடுப்பதும், உண்பதை மகிழ்வதும்,
ஏடு கொணர்வதும் எழுதுகோல் ஈவதும்
பாடெனக் கேட்க, பாடி யிருப்பதும்,
சுனைநீர்க் கொணர்வதும் சுள்ளியாற் காய்ந்த
வெந்நீர் மேனிக்கு விளாவிக் கொடுப்பதும்,
பொன்னுடல் கண்டுளம் பூரித் திருப்பதும்,
மின்னென மானென மீனெனத் திரிவதும்
அத்தான் கண்முன் அடிக்கடி மேய்ந்த
முத்து நகைச்சியின் மொய்ம்புக் குறும்புகள்!
செம்மல் வந்தபின் சிட்டாய்ப் பறந்து
தன்கை வேலையைத் தானே முடிப்பதை
அத்தையும் அறிவாள்; அகமகிழ்ந் திருந்தாள்!
எத்திறத் தானும் பொருத்தமென் றெண்ணினள்!
ஓரிரு நாட்கள் இவ்வா றெழுந்தன
நேரிழை குன்றம் நினையா திருப்பதை
ஒருநாள் அத்தை உணர்த்தி "ஒண்டொடி!
திருநாள் போலும் திரிந்தனை; ஆடுகள்
மேய்ச்சல் இன்றி மேனி இளைத்தன!
ஓச்சிக் கொடுபோ" என்றவட் குரைத்தாள்!
ஐயையும் இசைந்தாள் அரைமனத் தோடு!
கைக்கழி எடுத்தாள்; கட்டிய மரைகளைக்
குன்றுக் கோட்டினள்; போகுமுன் கோதை
வென்றவன் தன்மேல் வேல்விழி பாய்ச்சினள்!
ஐயை சென்றபின் ஆளனும் சென்றான்!

மைப்பெருங் கல்மேல் மங்கைசென் றமர்ந்தாள்!
ஆடுகள் மேய்ந்தன! அமைதியாய் அவள்முன்
பீடுறுங் கல்விப் பெருமகன் நின்ருன்!

ஆளன் வரவை அறிகிலா திருந்த
வாளமர் கண்ணிக்கு வரவை உரைக்க,
“ஆழ்ந்த எண்ணமோ ஐயை!” என வினவ,
சூழ்ந்த தனிமையை எண்ணிச் சுடர்தொடி,
நாணி நின்றனள்; நாளெலாம் அவன்பால்
மாண்பெருங் காதலைக் கூறும் மனத்தவள்
ஒரு சொல் தானும் உரைக்கிலா திருந்தாள்!
“மறுசொல் கூற மறுத்தனை போலும்”
என்றவன் இயம்ப ஏந்திழை அஞ்சி
நின்றவன் நோக்கினுள்! நீர்விழி நிறைந்தது!
ஆயிரம் கூறிட அவள்நா துடித்தது!
வாய்திறந் தொருசொலும் வாராது நின்றதே!
இருப்பினும் தன்னுளத் திருந்துயிர் நிறுத்திய
விருப்பெலாங் கூட்டி அச்சம் வீழ்த்தி
அன்பெலாங் குழைத்தே ‘அத்தான்’ என்ருள்!
என்பெலாம் உருக்கிய இச்சொல் அவன்செவிப்
பட்டதும் உள்ளம் பனியெனக் குளிர்ந்திட
‘விட்ட நெடுங்கதை வேண்டுமா? என்ருன்
வேண்டா வெனத்தலை யாட்டி விளக்கினுள்!
‘நீண்ட புதுக்கதை நிகழ்த்தவா’ என்ருன்
அதனையும் வேண்டா வெனத்தலை யாட்டினுள்!
‘இதுகேள் ஐயை எந்தமிழ் காக்கவும்
இந்நிலம் புகுத்திய இந்தியை விரட்டவும்
என்னருந் தோழரும் யானும் நிகழ்த்திய
நெடும்போ ராட்டமும் நேர்ந்த செயல்களும்
கொடுங்கோ லாணையின் காவலர் கொட்டமும்
படிப்படி யாகப் பகரவா ?’ என்ருன்.
பிடிப்பிலாப் பேச்சினுல் பேதை வருந்தி
முத்தவாய் திறந்து முறுவல் காட்டி
“அத்தான்! நீங்கள் அன்பைப் பற்றியே
அறிகிலீர் போலும்;” என்ருள்: அவனே
குறிப்பினை உணர்ந்து கொண்டான் எனினும்

"ஆருடை அன்பை? அன்னை அன்பையா
கூறு கின்றனை?" என்றிடக் கோதை
"அத்தை தம்மின் அரும்பெறல் மகன்மேல்
வைத்துள அன்பும், அவர்பால் வைத்த
உங்களின் அன்பும் உணர்வேன்; ஆனால்
உங்களைப் பற்றி ஓயாமல் எண்ணி,
உள்ளமும் உயிரும் உடலும் வாடி
கள்ளமில் அன்பைக் காதலாய் வளர்த்துத்
தேனும் பாலும் தேக்கிப் பிசைந்த
ஊனுங் கொள்ளாது உறக்கமும் இன்றி
இனிவரும் நாட்களை எண்ணி எண்ணியே
பனியினும் குளிரினும் வெயிலினும் சாகாது
பிழைத்துக் கொண்டுள பேதை ஏழையின்
தழைத்த அன்பினை உணர்விரா?" என்று
மடமட எனநீர் மல்கிடப் பொழிந்தாள்!
கடகட வென்றே காளை சிரித்து
'நன்றே அறிகுவேன் நான்' என உரைத்தான்!
'உண்மையா? அவள் பெயர் உரையுங்கள்" என்னத்
"தும்பை" என்றனன்! தோகையின் நெஞ்சில்
அம்பொன்று வந்தே ஆழப் புதைந்தது!
வல்லிடி தலைமேல் வந்து வீழ்ந்தது!
எல்லாப் பொருள்களும் இவள்முன் சுழன்றன!
நாடி தளர்ந்தது; நாளம் வெடித்தது!
ஓடிய குருதி உறைந்து நின்றது!
சுழிவெள் ளத்துச் சூருு வளியென
விழிசுழன் றிருண்டது! ஐயை வீழ்ந்தாள்!
காதற் கேங்கிய கன்னி
சாதலுங் காணாள்! சார்ந்தது துயரே!

(6)

விழிமலர் மலர்கையில் விரித்த பாயினில்
பழியறி கிலாத பைங்கொடி கிடந்தாள்!
முதியோள் அண்டையில் முழங்கை யூன்றி
விதிர்ப்புற இருந்தாள்! வெளித்திண் ணைமேல்
செம்மல் இருந்தான்; சென்ற நிகழ்ச்சியை
வெம்மை நெஞ்சம் நினைத்து வெடித்தது!

வெம்பிய உயிரின் விசையெலாங் கூட்டி
'அம்மா!' வென்றே அரற்றினுள் ஐயை!
'கண்ணே உயிரே! கலைவளர் திருவே!
என்னே அம்மா!' என்றனள் அத்தை!
ஒண்டொடி பேசவும் உள்ளே வந்தான்
திண்டோள் செம்மல்! தீதிலா மங்கை
அத்தை மடிமேல் தலைபுதைத் தழுதாள்!
அத்தையும் அழுதாள்! ஆளனும் அழுதான்!
குடிலிற் சாவொலி குடிகொண் டிருந்தது!
துடிதுடித் தந்தத் தோகை அழுததைக்
கண்டதும் செம்மல் கண்ணீர் சாய்த்தான்!
பெண்மையின் காதற் பெற்றியை வணங்கினுன்!
ஆயினும் தும்பை எனுமோர் அழகி
தூயதன் உளத்தில் முன்பே தோய்ந்ததால்
ஐயையின் காதலுக் கணையிட முயன்ருன்!
பொய்யிலா அன்பைக் கண்டு போற்றினுன்!
என்னினும் உளத்தை இரண்டாய்ப் பகுத்துப்
பொன்னி னல்லாட்குப் பகுத்திடல் புரையெனக்
கண்டான் ஆதலின் காதல் இளம்புரு
விண்டு விளக்கிய அன்பினை விலக்கினுன்!
அமைதியைக் கிழித்தே அவன்தாய் அவனிடம்
''குமைவுறும் காதற் குயிலைப் பாரடா!
உன்னையே எண்ணி உயிர் வாழ்ந் திருக்கும்
கன்னி அன்றிலைக் கண்ணுற் காணடா!
வராப் பொழுதெலாம் வாழாப் பொழுதென
இராப்பகல் வெதும்பிய இளமயில் தன்னை—
காத்துக் கிடக்கும் காதல் நினைவினுல்
பூத்துக் கிடக்கும் பூங்கொடி தன்னை
ஆடிக் கிடந்த அன்புறு நெஞ்சினுல்
வாடிக் கிடக்கும் வளர்கிளி தன்னை -
கூவிய பூங்குயில் காதற் குலைவினுல்
சாவின் மடியிற் சாயும் நிலையினை
உற்றுப் பாரடா மகனே! ஊழினுல்
பற்றுத் துறந்தும் படர்உற விகழ்ந்தும்
உறுதுணை துறந்தும் உயிர்துற வாமல்

நறுவாழ் வுங்கட்கு நாட்டும் நோக்கினுல்
இதோ கிடக்கின்ற இவளுக் காகவும்
உதோநிற் கின்ற உன்றனுக் காகவும்
உடலம் குலேந்தும் உளங்குலே யாமல்
கிடக்கும் இந்தக் கிழவியைப் பாரடா!
பார்த்துப் பார்த்துப் பதைப்புற நின்றழு!
ஆர்த்துப் பறந்த அன்புப் புருவின்
சிறகைத் துணித்த செயலுக் காகவும்,
உறவை உதறிய உன்றனுக் காகவும்,
அழவேண் டும்நீ! அழவேண் டும்'' என,
அழுகையும் சினமுமாய் அன்னே கதறினுள்!
கொட்டிய சொற்களால் கோதையும் அவனும்
வெட்டுப் பட்ட விளரிள மான்களா
உள்ளமும் உடலும் உயிரும் துடித்தனர்!
முள்ளெனும் சொற்களால் முதியவள் மீண்டும்
"இறுதியாய் உனக்கொன் றியம்புவேன் ; இதுகேள் !
உறுதி இவ்வுரை ; இவளே நீ உளங்கொள
மணந்து கொள்வை யாயினென் மகன் நீ !
தணந்து கைவிடில் தாயுனக் கலள் நான் ;
செல்வியை மணம்பெறும் எண்ணச் சீர்மையால்
கல்வி புகட்டினேன் ; வயிற்றைக் கட்டினேன் !
படித்துத் தேறினே ; பகட்டின் மயங்கினே !
துடிப்புற என்பால் தும்பை எனுமொரு
சிறுக்கியை மணப்பதாய்ச் செப்பினே ! ஆங்கெனில்
இறுக்கிக் கொண்டேன் என்னுளம் ! எழுந்துபோ !
நானும்நான், தேடிய நால்வகைப் பொருள்களும்
ஈறு மகளென இதோ ஈங் கிருக்கும்
ஐயைக் களித்தேன் அகலுக நீ '' யென
வெய்ய உரைத்தாள் ! வீசிய வேல்போல்
தாவி நடந்தான் தனிமகன்!
ஆவி போனதா அலறினுள் ஐயையே !

–(படரும்)

விடையிதழ்த் தொடர்ச்சி

பாரதிதாசன் பாத்திறம்

பின்னிக்கொண்டே போகும் சிலந்திப் பூச்சியின் விரைவும் அவ் வலையைப் போன்ற சிக்கலும், ஆனால் ஒழுங்கும் நிறைந்தது பாவலனின் உள்ளம். இயற்கை நிகழ்ச்சிகளாயினும் சரி; செயற்கை நிகழ்ச்சிகளாயினும் சரி; இரண்டு நிகழ்ச்சிகளும் அடிப்படையில் ஒன்று போல்வனவே என்பதுதான் பாவலன் எண்ணம்! சிட்டுக்குருவிகள் ஒன்றாகப் பறந்து வருவதையும், இளஞ்சிறார்கள் பள்ளிக்கூடம் விட்டு வீட்டிற்குப் பறந்து வருவதையும் ஒன்றாகக் காண்கின்றன, பாவலர் பாரதிதாசனின் கண்கள். அவர் கற்பனைக் கண்களில் பட்ட இன்னொரு காட்சியையும் பாருங்கள்.

நெடுநாட்களாகக் குழந்தைப் பேறில்லாதவள் ஒருத்தி இறுதியில் பெண்குழந்தை யொன்றினைப் பெற்று நாளொரு எண்ணமும் பொழு தொரு வண்ணமுமாகப் பேணி வளர்த்து வருகின்றாள். குழந்தை கைகளில் தவழ்ந்து கொண்டிருக்கையிலேயே அவள் நடந்து போவ தையும், அச்சிறிய கால்களில் செறுப்பைத் தான் மாட்டுவதையும், கையில் குடையும் பொத்தகங்களும் தூக்கிக்கொண்டு அது பள்ளிக்குச் செல்லும் காட்சியினையும் காணத் துடிதுடிக்கின்றாள். நெடுநாளாகப் பிள்ளைப் பேற்றுக்கு ஏங்கியவளாயிற்றே! தன்னுடன் மணமானவர் களுக்கெல்லாம் இன்று பெரிய பெரிய பிள்ளைகள் இருப்பதும் அவர் களுக்கெல்லாம் அவ்வத் தாய்மார்கள் புனையும் அணிமணிகளையும் ஆடை வகைகளையும் பார்த்து இதுநாள் வரை துயர நினைவுகளைச் சுமந்தவள் இவள். எனவே தன் பேரிளமைக்காலத்தில் பெற்ற குழந்தை வளர்ந்து பெரிய பெண்ணாகத் தன்முன் காட்சி தரும் வரை 'நாம் இருப்போமா' என்ற எண்ணம் அவள் உள்ளத்தை அறுத்துக் கொண்டேயிருக்கின்றது. எப்படியும் அக்குழந்தையின் மணவினைப் பருவம் வரை இல்லாமற்போனாலும், பேதை-பெதும்பைப் பருவங்கள் முடியும் வரையிலாகிலும் இருக்கமாட்டோமா என்ற ஒரு நம்பிக்கையும் அவள் உள்ளத்தில் இடையிடையே இழையோடுகின்றது. அவள் உள்ளத்தை நம் புதுவைப் பாவலர் தம் கற்பனையாற்றல் கொண்டு புகுந்து பார்த்த ஓவியத்தைப் பாருங்கள்.

காலுக்குப் புன்னையிலை போலும் செறுப்பணிந்து
கையில் விரித்த குடை தூக்கி – நல்ல

கல்விக் கழகமதை நோக்கி - காய்ச்சும்
பாலுக்கு நிகர்மொழிப் பாவை நீ செல்லுவதைப்
பார்க்கும் இன்பந்தானடி பாக்கி!

எப்படி ? படப்பிடிப்பு! குழந்தைக்குப் பால் காய்ச்சிக் கொண்டிருக் கையில் எழுந்த எண்ணம் இது! அதனுல்தான் 'காய்ச்சும் பாலுக்கு நிகர்மொழிப் பாவை, என்கின்ருர் பாவலர். 'நீ செல்லுவதைப் பார்க்கும் இன்பம்' என்று கூறுவதன் வழி குழந்தை இன்னும் நடை பயிலாமல் உள்ளது என்பதைக் கூருமல் கூறுகின்ருர். 'பாக்கி' என்ற ஒரு சொல்தான் தாயின் பேரிளமைப் பருவத்தைக் குறிப்பதற் காக அமைந்த சொல். இப்படிச் சிற்சில சொற்களை வைத்துக் கொண்டு இப்புதுமைப் பாவலர் பின்னிய கற்பனை வலையைப் பார்த் தீர்களா ? மேலும் தொடர்கின்றது அவர் கற்பனைத் தேரோட்டம்.

மேலுக்குச் சட்டையிட்டு மெல்லியசிற் ருடைகட்டி
வீட்டினின்றும் ஆட்டமயில் போல — கைம்
மேற்சுவடி யோடுதெரு மேலே — கூர்
வேலுக்கு நிகர்விழி மெல்லிநீசெல் வதைக்காண
வேண்டுமேஇப் பெற்றவள்கண் ணுலே!

''—ஆமாம். அந்தக் காட்சியைக் காணுமல் நான் இறந்துவிடமாட் டேன்'' என்ற ஏக்கமும் நம்பிக்கையும் கலந்த அவலக் குரலைத் தாய் வெளிப்படுத்துகின்ருள். இந்தப் பாட்டு கைக் குழந்தைக்கு மையிடு கையில் எழுந்த பாட்டு. குறிப்பு எங்கே யிருக்கின்றது தெரியுமா ? 'கூர் வேலுக்கு நிகர் விழி மெல்லி' என்று விளிக்கின்ருளே தாய் அந்தச் சொற்களில்! இச்சொற்களில்தான் இக் கற்பனைக் காட்சியின் முடிச்சு முடியப் பெற்றுள்ளது. இப்படிப் படமெடுத்தாடும் தாயின் மனக் காட்சிகளைப் பார்க்க வேண்டுமானுல் புலவர் எத்துணையளவு ஆற்றல் படைத்த கற்பனைக் கண்ணுடிகளைப் போட்டுக்கொள்ள வேண்டும் பாருங்கள்

இப்படிப்பட்ட கற்பனை வளம், கழகக் காலத்துப் புலவர்களிடம் ஏராளமாக இருந்தது. உண்மையின் அடிப்படை துளியும் சிதையா மல் அவர்கள் கற்பனையை எடுத்துக் காட்சியாக விரித்துக் காட்டியுள் ளனர். கழகக் காலத்திற்குப் பின் — ஆரியர்கள் தங்கள் போலியும் பொய்மையும் நிறைந்த பழங்கதை மூட்டைகளை அவிழ்த்துத் தமிழ் நாட்டில் உதறிவிட்ட பின்பு பாவலர்களின் உள்ளங்கள் இயற்கை நெறியினின்று வழுவிக் கவைக்குதவாத கழிசடைக் கற்பனைகளுக்

கெல்லாம் தாவிப் பறந்தன. உள்ளங்களில் புகுந்து அங்குச் சுழித்தோடும் எண்ண நீரோட்டங்களைக் கண்டு சுவைக்கவும் சொல்லி மகிழவும் வல்ல ஆற்றல் ஓர் உண்மைப் பாவலனுக்கே கைவரப் பெற்றதாகும். பொய்மைப் புலவனுக்கு உள்ளத்தைப் பார்க்கும் ஆற்றல் இல்லை. அவன் பிறரைப் போலப் புற அழகுகளிலேயே தன் கருத்தைச் செலுத்துகின்றான். புற நிகழ்ச்சிகளுக்குக் காரணமான அக உணர்வுகளிலே அவன் கற்பனை பாய்வதில்லை. காரணம் அது கூர் மழுங்கிக் கிடக்கும். ஒரு நிகழ்ச்சியின் மேலாடைகளையும் புற அணிகளையுமே எண்ணிக் கொண்டிருக்கின்ற பொய்மைப் பாவலன் ஒருவனின் கற்பனைக் கூர்மையற்ற எளிய தன்மையை அவன் எழுதும் சருகுப் பாடல்களின் வழி மிக எளிதாகக் கண்டு கொள்ளலாம். அப்பாடல்களில் உள்ளத்தின் படப் பிடிப்பு இருக்காது. உடலின் கோணல் மாணலான நெளிவு சுழிவுகளும் அவற்றின் அசைவு ஆரவாரங்களுக்கான புறவுறுப்புகளின் பள்ளம் மேடுகளுமே காட்டப் பெற்றிருக்கும். உள்ளத்தை ஊடுருவிப் பார்க்கும் கதிர்க்கண்கள் கொண்ட மெய்ம்மைப் பாவலனுக்கும் அவனுக்கும் மலைக்கும் மடுவுக்குமுள்ள வேற்றுமைகள். மெய்மைப் பாவலன் ஒருவன் புற நிகழ்ச்சிகளை நோக்குமளவிற்கும் பொய்ம்மைப் பாவலன் ஒருவன் நோக்கும் அளவிற்கும் கூட நிறைய வேற்றுமை உண்டு! குருடன் பொருள்களைத் தடவிப் பார்த்து உணர்வது போல், பொய்மைப் பாவலன் பொருள்களின் தன்மையை அவ்வவற்றின் வண்ணத்தாலும் மேடு பள்ளங்களாலுமே அறிகின்றான். அவையே அவன் உள்ளத்தை எளிதில் கவருந் தன்மையன. ஆனால் மெய்ம்மைப் பாவலன் ஒருவன் புறப் பொருள்களைக் கூட அகவுணர்வு கொண்டே மதிப்பிடுகின்றான். அகவுணர்வு சிறக்காத-பளிச்சிடாத எந்தப் புற நிகழ்ச்சிகளுக்கும் அவன் மதிப்புத் தருவதில்லை. அவை அவன் உள்ளத்தைக் காந்தும் வல்லமையைப் பெற்றிருப்பதில்லை. அவன் காணுகின்ற எச்செயலுக்கும் அச்செயலுக்குக் காரணமான உள்ள உணர்வு அவனுக்கு விளங்குகின்றது. பழங்களை அவற்றின் வித்துகளோடுதான் அவன் காண்கின்றான். வித்து வேறாகவும் பழம் வேறாகவும் பிரித்துக்காண அவன் விரும்புவதில்லை. அப்படியே அவன் பழகிவிட்டதால் எந்தெந்த வித்திற்கு என்னென்ன பழங்கள் தோன்றும் என்று அவனுக்குத் தெரியும். அதுபோலவே இன்னின்ன பழங்களுக்கு எவைஎவை வித்துகளாக இருக்குமென்பதும் அவனுக்குத் தெரியும். ஒரு நிகழ்ச்சியைக் காணுங்கால் என்ன என்ன உணர்வுகள் நம் மனங்களில் எழும்புகின்றனவோ, அவ்வம் மன உணர்வுகளை நம்

முன் ஒரு பாவலன் எழுப்பிய உடனேதான் நம் மனத்திரையிலும் அந் நிகழ்ச்சி ஒளிவிடுகின்றது. இம்மன உணர்வைத் தொட்டுக் காட்டாத எந்த ஓர் எளிய மாந்தனும் பாவலனாகிவிட முடியாது. ஒரு பழத்தை நாமே உண்டு சுவைப்பது வேறு; பிறர்க்கு உணர்த்திச் சுவைக்க வைப்பது வேறு! புலனறிவும், பொறியறிவும் படைத்த எல்லா உயிர்களும் இவ்வுலகக் காட்சிகள் எல்லாவற்றையும் கண்டு அவ்வவ்வுயிர்களுக்குள்ள திறனுற்றலின்படி அவ்வக் காட்சிகளால் இன்பமோ துன்பமோ உறுகின்றன. ஆனால் அவை எல்லாமும் தாம் தாம் பெற்ற உணர்வுகளைக்கொண்டு, பிற உயிர்களுக்கு அவ்வந் நிகழ்ச்சிகளை எடுத்து விளம்பும் திறம் பெற்றிருக்கவில்லை. இத்திறத்தை மெய்ம்மைப் பாவலன் ஒருவனே முழுமையாகப் பெற்றிருக்கின்றான். எனவே எந்த நிகழ்ச்சியினையும் அவன் வெறுங்கண் கொண்டு மட்டும் பார்ப்பதில்லை. கற்பனைக் கண்களால் கண்டு, உணர்வுக் கைகளால் தொட்டு அவ்வவற்றின் பாங்கினை அறிந்து உணர்த்தும் அவன்றன் அரிய ஆற்றலுக்கு இவ்வுலகம் மிகச் சிறியது.

பாவேந்தர் பாரதிதாசன் ஒரு மெய்ம்மைப் பாவலர் ஆகையால் நிகழ்ச்சிகளின் வெறும் புற நெளிவுகள் மட்டும் அவர்க்குப் புலப்படுவதில்லை. அந்நெளிவுகளுக்குக் கீழே அவற்றிற்குத் தொடர்பில்லாத மன நீரோட்டங்களையும் கூட. தெளிவாகக் காட்டுகின்றார்.

தலைவி ஒருத்தி, தலைவனையும் பிள்ளைகளையும் அலுவலுக்கும் பள்ளிக்கூடத்திற்கும் விடுத்த பின் தன் வீட்டு வேலைகளில் கவனம் செலுத்துகின்றாள். அவள் செய்யும் பணிகள் வேறு! அவற்றிற்கடியில் மொய்த்துக் கொண்டுள்ள எண்ணங்கள் வேறு! பொய்மைப் பாவலன் ஒருவன் அவளைக் கண்டானானால் அவள் செய்யும் பணிகளை மட்டுமே எண்ணி எடுத்து வைப்பான். அவற்றில் ஓவியம் இருக்கலாம். ஒளி இருக்காது: உணர்வு இருக்காது! படத்தில் வரைந்த கதிரவன் போல் ஒளியற்றும் சூடற்றும் இருக்கும். ஆனால் ஓர் உண்மைப் பாவலன் கண்களில் பட்டு உள்ளப் பட்டடையில் உருவான அக்காட்சிக்கு உருவமும் உண்டு; அதில் ஒளியுமுண்டு; உள்ளுணர்வும் உண்டு! இம்மூன்றும் கலந்து பாயாவிட்டால் பிறர் உள்ளத்தில் அப்பாட்டு பாறையில் விழுந்த பனிக்கட்டி போல் பட்டுச் சிதறிவிடும். உள்ளே பாயாது; பாய்ந்து உயிரில் கலவாது. பாவேந்தரின் குடும்பத் தலைவி என்னென்ன செய்கின்றாள்; என்னென்ன நினைக்கின்றாள் பாருங்கள்.

ஆடிக்கொண் டிருக்கும் தையற்
பொறியினை அசைக்கும் ஓர்கை!
ஓடிக்கொண் டிருக்கும் தைத்த
உடையினை வாங்கும் ஓர்கை!
பாடிக்கொண் டேயி ருக்கும்
பாவையின் தாமரை வாய்!
நாடிக்கொண் டேயி ருக்கும்
குடித்தன நலத்தை நெஞ்சம்!

உடலசைவும் உள்ள அசைவும் எப்படிப் படம் பிடிக்கப் பெற்றிருக்கின்றன பார்த்தீர்களா? இதில் இறுதி அடி இல்லையானால் முன்னுள்ள அடிகளுக்கு ஒளியுமிருக்காது; சூடும் இருக்காது. உடலின் எல்லா உறுப்புகளும் வேலை செய்யும் பொழுது உள்ளம் மட்டும் சும்மா இருந்துவிடுமா? மற்ற உறுப்புகளின் வேலைகளைச் சொன்ன பாவலன் உள்ளத்தின் வேலையைச் சொல்லவில்லையானால் அவன் எப்படி முழுமைப் புலவன் ஆவான்? நாம் நடக்கையில், ஓடுகையில், உடுக்கையில், உண்கையில். உறங்குகையில், நம் உடலுடன் சேர்ந்து உள்ளமும் நடந்தும், ஓடியும், உடுத்தும், உண்டும், உறங்கியுமா இருக்கின்றது? இல்லை; இல்லவே இல்லை. நாம் நடக்கையில் உள்ளம் ஓடிக்கொண்டிருக்கலாம்; பறக்கலாம் அல்லது தூங்கலாம். அல்லது முன்னவற்றையோ பின்னவற்றையோ நினைந்து அழுதுகொண்டிருக்கலாம். அதேபோல் பிறவினைகள் செய்கையிலும் உள்ளம் அவ்வவ் வினைகளில் ஊன்றியுமிருக்கலாம்; ஊன்றாமலும் இருக்கலாம். ஆனால் எந்த நிலையில் நம்மைக் கண்டாலும் நம்மை வேறு நம் உள்ளத்தை வேறாகக் காணும் திறம் பெற்றவர்களே நுண்ணறிவு மிக்க பாவலர்கள். அவர்கள் ஒருவரை அவரின் உள்ளத்தை விட்டு அவரை மட்டும் தனியாகப் பார்ப்பதில்லை. அப்படிப் பார்க்கின்றபடி ஒருவர் எந்த நிலையிலும் இருப்பதில்லை. பாவேந்தரின் கற்பனை யாற்றல் நிறைந்த கண்கள், அந்த இல்லத் தலைவியை இன்னும் எப்படி எப்படிக் காண்கின்றன பாருங்கள்.

"பள்ளிக்குச் சென்றி ருக்கும்
பசங்களில் சிறிய பையன்
துள்ளிக் குதித்து மான் போல்
தொடர்ந்தோடி வீழ்ந்தானோ? என்
றுள்ளத்தில் நினைத்தாள்; ஆனால்
மூத்தவன் உண்டென் றெண்ணித்

தள்ளினுள் அச்சந் தன்னை!
தாழ்வாரம் சென்றுள் நங்கை!"

தலைவி நடக்கையில் உள்ளமும் நடக்கின்றது; ஆனால் தலைவி நடப்பு வேறு! உள்ளத்தின் நடப்பு வேறு! உடல் வீட்டு வேலைகளில் ஈடுபட்டு அசைந்து கொண்டிருக்கின்றது. உள்ளமோ, பள்ளிக்கூடம் சென்றிருக்கும் பையன்களுக்குத் துணையாகப் போய்வருகின்றது. அருகிலிருந்தால் மட்டுமே பேணுதற்குத் திறம் பெற்றுள்ளது அவள் உடல்! ஆனால் அவர்கள் அருகில் இல்லாமற் போனாலும் பேணுதற்குத் திறம் பெற்றுள்ளது அவள் உள்ளம். பாவேந்தரின் கற்பனை சான்ற உள்ளமோ இரண்டு அசைவுகளையும் காணும் திறம் பெற்றது. ஒரே பொழுதில் அவள் அசைவுகளையும் படம் பிடிக்கின்றது அவள் உள்ளத்தின் அசைவுகளையும் படம் பிடிக்கின்றது. பாட்டைப் பாருங்கள்.

இடையிலே மாமன் 'விக்குள்'
எடுத்தது தண்ணீர் கொஞ்சம்
'கொடு'எனக் கொடுத்தாள்; பின்னர்க்
கூடத்துப் பாவை ஓடி
அடுக்களை அரங்கில், நெஞ்சம்
அசைந்திட ஆட லானுள்!

எப்படி? நெஞ்சம் அசைகின்றது; உடல் ஆடுகின்றது! அரங்கம் எது? அடுக்களை! உடலுக்குத்தான் கனம் உண்டு; உருவம் உண்டு. எனவே ஆடலாம்! ஆனால் உள்ளத்திற்கு உருவம் இல்லை; கனமும் இல்லை; எனவே அசையத்தான் முடிகின்றது! ஆனால் இரண்டு நிகழ்ச்சிகளுக்கும் அரங்காக இருப்பது அடுக்களையாம்! எப்படி கற்பனை? இதில் இன்னொன்றையும் பாருங்கள். மாமன் விக்குளுக்குத் தண்ணீர் கொடு என்கின்றார். தலைவி தண்ணீரை எடுத்துக்கொண்டு வரும்பொழுதும், அதைத் தந்துவிட்டுப் போகும் பொழுதும் 'பாவை' போல் வந்தாளாம்; போகின்றாளாம்; மாமன் கண் மறைந்ததும் ஓடுகின்றாளாம்! அந்தப் பக்கத்திற்கு – அவளுக்கே உரிய அடுக்களைக்குப் போனவுடன் ஆடுகின்றாளாம்! எப்படி இருக்கின்றது பார்த்தீர்களா பாவலரின் நுண் பெருக்காடி போன்ற கற்பனைத் திறன்! கூடத்தில் இருக்கும்பொழுது பாவையாக அசைகின்றாள்! அடுக்களைக்குப் போனவுடன் நாட்டியம் ஆடுகின்றாள். என்ன நாட்டியம், பரத நாட்டியமா? இல்லை. சமையல் நாட்டியம்!

அந்தச் சமையல் நாட்டியம் ஆடுகின்றபொழுதும் கூட உள்ளம் சும்மாயிருப்பதில்லை.

"கொண்டவர்க் கெது பிடிக்கும்
குழந்தைகள் எதை விரும்பும்,
தண்டுன்றி நடக்கும் மாமன்
மாமிக்குத் தக்க தென்ன?
உண்பதில் எவரு டம்புக்
கெதுஉத வாதென் றெல்லாம்
கண்டனள்; கறிகள் தோறும்
உண்பவர் தம்மைக் கண்டாள்!

பாவலர் உள்ளம் தம் நெஞ்சக் கற்பனையை மட்டும் நமக்குச் சொல்லுதில்லை. அதுகாணும் மாந்தர்களின் உள்ளக் கற்பனையையும் நமக்குக் காட்டும் வல்லமை பெற்றது. பாட்டை மேலும் பாருங்கள்.

பொரியலோ பூனைக் கண்போல்
பொலிந்திடும்; சுவைம ணக்கும்!
"அருந்துமா சிறிய பிள்ளை"
எனஎண்ணும் அவளின் நெஞ்சம்;
இருந்தத்தச் சிறிய பிள்ளை
இச்சென்று சப்புக் கொட்டி
அருந்தியே மகிழ்ந்த தைப்போல்
அவள் காதில் ஓசை கேட்கும்!

— என்கின்றார். பொரியலைப் பார்த்தவுடன் பூனைக்கண் பாவலரின் நினைவுக்கு வருகின்றது! அவர் மூக்கு அப்பொரியலின் சுவையையும் நுகர்கின்றது. அத்துடன் அவள் அந்தப் பொரியலைச் சிறிய பிள்ளை அருந்துமா என்று எண்ணுகின்ற எண்ணமும் அவருக்குப் படுகின்றது. அதன்பின் அவள் உள்ளத்தில் தோன்றுகின்ற பொரியலைச் சப்புக்கொட்டி அருந்துகின்ற பிள்ளையின்-ஓவியமும் பாவலரின் உள்ளத்திற்குத் தெரிகின்றது. உடனே அவள் அடைந்த மகிழ்ச்சியும் அவள் காதில் கேட்ட 'இச்' சென்ற ஓசையும் நம் பாவேந்தர் உள்ளத்திற்கும் காதுகட்கும் எட்டுகின்றன. அவர் கற்பனை உள்ளத்துத் தலைவியின் உள்ளத்தில் கேட்கும் ஓசையை நம் காதுகளிலும் விழுமாறு செய்கின்றது அவர்தம் உணர்வு ஆற்றல். இதுதான் ஓர் உண்மைப் பாவலனின் கற்பனைத் திறனின் பேரளவு!

பாவலர் தன் கண்களாலும், காதுகளாலும், வாயாலும் சுவைத்த காட்சிகள், ஓசைகள், சுவைகள் எல்லாவற்றையும் நம் கண்களுக்கும், காதுகளுக்கும், வாய்களுக்கும் எட்டவைக்கின்ருர். இவற்றுடன் அவர் உள்ளக் கைகள் தொட்டுப் பார்க்கும் உணர்வு முட்டங்களையும் நம் உள்ளத்தின் காந்த முனையில் பொருத்திக் காட்டு கின்ருர். உடனே நம் உடலும் அத்தகைய நல்லுணர்வுகளால் நிரம்பி வழிகின்றது. இத்தகைய கற்பனைத் திறம் ஒருவர்க்கிருக்க வில்லையாளுல் அவர் பாவலர் என்று அறிஞர் அவையில் காலடி எடுத்து வைத்தல் இயலாது! கற்றதுணர விரித்துரைக்கும் ஆற்றலற்ற இணருழ்த்தும் நாரு மலரைப் போன்ற அப் போலிப் பாவலர்கள் நெடு நாட்கள் உயிர் வாழ்வதிலர்.

வளமை மிக்கக் கற்பனை ஆற்றலும் கொழுமை மிக்க உணர்வு ஊற லும், செழுமை மிக்க உள்ளச் சிலிர் சிலிர்ப்பும் மிகுந்த பாவலர்களே, பாட்டுக் கலையில் வெற்றி பெறுகின்றனர். அவர்தம் கற்பனை யாற்றலே இடம், காலம் முதலியவற்றை ஊடுருவிப் போகும் திறன் சான்றவை. பாவேந்தரின் கற்பனை யாற்றலை மட்டும் காட்டப் புகுந்தோமாமுல் இக்கட்டுரை ஒரு பெருநூலாக விரியும். அவர் தம் உள்ளம் மேய்ந்த இடங்கள் அளவில. அவர்தம் உணர்வுள்ளம் பருகி வேட்கை தணிந்த காட்சிச் சுனைகள் கணக்கில. அவற்றின் புது மெருகு குலையாத – முனை முறியாத ஓவியப் பாடல்கள் ஏராளம்! அவற்றைச் சுவைக்கையில் நாமும் அத்தகைய நல்லுணர்வு மின்னல் களால் தாக்கப் பெறுவோம்! நம் உடல் வண்ணங்களையும் உள் ளுணர்வு எண்ணங்களையும் உடனே மாற்றவல்லன அவை! சூடும் குளிர்ச்சியும், சிலிர்சிலிர்ப்பும், மதர்மதர்ப்பும், புல்லரிப்பும், பொடி பொடிப்பும் நிரம்பி, அழுகையும், சிரிப்பும், இழிவும், இரக்கமும், அன் பும், வன்பும், அறமும் மறமும் ஊடாடும் அவை நம் உள்ளங்களையும் உணர்வுகளையும் வளர்க்கும் வளமை, சான்றன. மாந்த உயிர் களின் உள்ளங்களை மட்டும், அவர் படைத்தாரல்லர். அவர் கற்பனைத் திறமிக்க எண்ணக் கைகள் சிற்றுயிர்களின் உள்ளங்களில் கிடக்கும் நினைவு மணிகளையும் பொறுக்கி நமக்குப் பாடல் மாலைகளாகத் தந்திருக்கின்றன.

ஆலமரத்தில் வாழும் குரங்கு ஒன்று அங்குள்ள விழுதுகளையெல் லாம் பற்றித் தாவி விளையாடிக் கொண்டிருக்கின்றது. இந்த விளை யாட்டுப் பிள்ளைக்குரங்கிற்கு அம்மரக் கிளையில் தொங்கிக்கொண்

டிருக்கின்ற பாம்பு ஒன்றும் விழுதாகவே படுகின்றது. அதையும் போய்த்தொட்டு விடுகின்றது அக்குரங்குப் பிள்ளை! உடனே பாம் பென்றறிந்து வெடுக்கென்று கையை எடுத்துக்கொண்டு அச்சத்தால் அங்குமிங்கும் தாவி ஓடுகின்றது. அச்சமுற்ற அதற்கு அங்குள்ள விழுதுகளெல்லாம் பாம்பாகவே படுகின்றன. அவற்றிலெல்லாம் கை வைக்காது அஞ்சியஞ்சி உச்சிக் கிளைக்கு ஓடி அமர்ந்து கொள்ளுகின்றது. அப்பொழுதும் அதன் அச்சம் அடங்கினபாடில்லை. அமர்ந்து கொண்டிருக்கும் அக்குரங்கு கீழே பார்க்கின்றது. அதன் வால் பின்புறம் தொங்குவது தெரிகின்றது. அதுவும் கூட பாம்புதானோ என்று பார்த்து நடுநடுங்குகின்றது. இக்காட்சியை மிக அழகாக, உள்ள உணர்வு மழுங்காமல் குறைந்த அடிகளால் ஓவியமாக்கிக் காட்டியிருக்கின்றது அவர் கற்பனை உள்ளம். பாடலைப் பாருங்கள்.

கிளையினில் பாம்பு தொங்க
விழுதென்று குரங்கு தொட்டு
விளக்கினைத் தொட்ட பிள்ளை
வெடுக்கெனக் குதித்ததைப் போல்
கிளைதோறும் குதித்துத் தாவிக்
கீழுள்ள விழுதை யெல்லாம்
ஒளிப்பாம்பாய் எண்ணி எண்ணி
உச்சிபோய்த் தன்வால் பார்க்கும்!

குரங்கின் மன உணர்வு – அதன் உயிரச்சம் இப்பாடலில் எப்படி ஏடுத்துக் காட்டப்படுகின்றது பாருங்கள். கற்பனைத் தேரேறிய பாவலன் கண்களுக்குப் புலப்படாமல் ஒளிந்துகொள்ளுகின்ற உண்மை ஒன்றுமேயில்லை. ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. ‘An expert who knows more and more about less and less’. ‘வல்லுநன் என்பவன் மிக மிக எளிய பொருள்களைப் பற்றியும் மிகமிக விரிவாக அறிந்திருப்பவன்’ என்கின்றது – அப்பழமொழி. புலவன் ஒருவனும் அத்தகைய திறம் பெற்றிருப்பவனே! மிகச் சிறிய பொருளைப் பற்றிக் கூட மிகப் பெரிய உண்மைகளை எளிதில் சொல்லிவிடும் திறம் பெற்றிருப்பவன் அவன். அவனின் இத்தகைய வல்லமைக்குத் துணை நிற்பது அவன்றன் கற்பனை ஆற்றலே! அக் கற்பனை ஆற்றலும் இயற்கைக்கு மாறுபட இயங்குமாயின் அவை இங்குள்ள மாந்தர்தம் உள்ளங்களை மிகுவாகக் கவர்வதில்லை. உத்திக்குப் பொருந்தாத வரம்பு மீறிய கற்பனைகள் பொய்மை சான்றவாகலின், மாந்த உள்ளங்கள் அவற்றில் திளைத்து மகிழ்வதில்லை.

மலேத்து நிலேகுத்திப் போய்விடுகின்றன. உள்ள உணர்வில் திளேத்து அளாவாத எந்தக் கற்பனேயும் அந்த உள்ளங்களே வளர்வுறவோ திசை மாற்றவோ செய்வதில்லே. அவை மாந்த உள்ளங்களே மயங்கவைத்து அறிவைச் சிதற அடிக்கும் பொறியின்பம் போன்றவை; பாம்புக்கு ஊதும் மகுடியிசை போன்றவை. ஆ ஞ ல் மாந்தர்க்கு இயைந்த கற்பனேகளே மக்கள் உள்ளங்களேப் பதப்படுத்தும் ஆற்றல் சான்றவை. மாந்த உள்ளங்கள் பதப்படுத்தப் பெருதவரை அக்கற்பனேகளுக்கு வாழ்விருக்கும்; சூடிருக்கும்! இக்கற்பனேகளே இயக்கியல் கற்பனேகள் என்றும், உள்ளத்திற்கும் இயற்கைக்கும் பொருந்தாத கற்பனேகளே மயக்கியல் கற்பனேகள் என்றும் கூறலாம். தமிழ் இலக்கியங்களில் கழகக் காலத்து இயக்கியல் கற்பனேகளே நிரம்பியிருந்தன; அவையே சூம்பிக் கிடக்கும் முட உள்ளங்களே உணர்வேற்றி நிமிரச் செய்தன. சாம்பிக் கிடக்கும் உள்ள உணர்வுகளேச் சிலிர் சிலிர்ப்புக் கொள்ளச் செய்தன; தூங்கிக் கிடக்கும் உள்ளங்களேத் தட்டியெழச் செய்தன; மயங்கிக் கிடக்கும் நெஞ்சங்களின் மயக்கறுத்தன; இருண்டு கிடந்த உள்ளுணர்வுகளில் ஒளி பாய்ச்சின. ஆனுல் கழகக் காலத்திற்குப் பின்னேத் தமிழிலக்கியங்களில் மயக்கியல் கற்பனேகளே மிகுந்து மாந்த உள்ளங்களே மயலில் ஆழ்த்தின; இருளில் புகுத்தின; நொடியச் செய்தன; மடியக் கிடத்தின. இத்தகைய கற்பனே முட்டைகளே அவிழ்த்தவர்கள், பெண்டிர்தம் மேனி மினுக்குகளில் கட்டவிழ்ந்து கிடந்த சிற்றரசர் தம்மையும், செல்வர் தம்மையும் பாடிய கூலிப் பாவலர்களேயாவர்! எனவே கழகக்காலத்திற்குப் பின் இருள் மண்டிப் போன தமிழிலக்கிய உலகில் ஒளிக்கதிர் போல் மீண்டும் சுடரேற்றிய இயக்கியல் கற்பனேப் பாவலர்களில் பாரதிதாசன் முன்னேடியாவர். இவர்தம் உள்ளுணர்வை முற்றும் அவ் வொளித்தொண்டிலேயே செலவிடாமற் போயினும் ஓரளவு அத்தொண்டைத் தொடங்கிய முதற் பாவலர் என்ற பெருமையைப் பெறவேண்டியவர்.

இனிக் கற்பனேத் திறனுக்கு ஊற்றுக் கோலாகப் பாவலன் ஒருவனுக்கிருக்க வேண்டிய உவமைத்திறன் பற்றியும், அதில் பாவேந்தர் பாரதிதாசன் கொண்ட ஈடுபாடு பற்றியும் ஒரு சிலவற்றைப் பார்ப்போம்.

– (தொடரும்)

பொது நூலகங்களில் தென்மொழி வரவழைக்கக்
கையொப்பங்கள் வாங்கி
விடுத்துவிட்டீர்களா ?

திரைக் கூத்தர் கேடு.

ம. இலெ. தங்கப்பா

திரைப்படத்துக் கூத்தர்தமைக் கூத்தி மாரைத்
திகழ் தெய்வப் பிறவிகளாய்க் கருதி, அன்னார்
கரப்பினுக்கும், நடிப்பினுக்கும் உளம் மயங்கிக்
கால்விழவும் கூசுகிலா இளையீர், உம்மேல்
இரக்கமுற்றுக் கூறுகின்றேன் : போலி கட்கே
ஏமாந்து போகாதீர்! உணர்வை, நெஞ்சை
நெருப்பருகில் செலுத்தாதீர்! விலகி வாரீர்,
நிலைபேறும் வாழ்க்கையினைத் தேடு வீரே!

இழிகழுதை போலும், நாய் போலும், பன்றி
இளிக்கின்ற வகை போலும், எருமை போலும்
கழியுணர்வின் வெள்ளாட்டுக் கடாவைப் போலும்
காமவுணர் வெழுப்புமிழி குரல் எழுப்பிக்
கொழுத்தவொரு மலைக்குரங்கு பெட்டை யோடுங்
குலவுகின்ற அருவருப்பை மாந்தன் செய்யும்
இழிவிதன்றித் திரைப்படத்தில் வேறென் கண்டீர் ?
ஏந்திழையீர், நல்லிளையீர், இதிலோ நாட்டம் ?

அட்டைவாள் கைஏந்திப் பஞ்சிற் செய்த
அரும்புலியை வாய்கிழித்து, முழங்காற் சின்னீர்க்
குட்டையிலே படுத்தபடி கடலில் நீந்திக்
குன்றுமுக டென்றுமணல் மேட்டில் தாவி
எட்டுப் பேர் கோழைகளை எதிர்த்து வெல்லும்
ஏமாற்று நடிப்பெல்லாம் மறமே என்று
தட்டுகின்றீர் கைகளினை! வெளியில் வந்தால்
தமைமறந்தே அவரடியில் வீழ்கின் றீரே!

அவர்போலும் உடையணிவீர்; செருக்காய்ப் பார்ப்பீர்;
அவர்போலும் நடைநடந்து பெருமை கொள்வீர்.
அவர் போலும் மயிர் மழுக்கிக் கொள்வீர்; நாளும்
அவர் போலும் கரகரத்த குரலில் பேசி
அவர் போலும் கெக்கலிப்பீர்; கோணி நின்றே
அவர் போலும் நிழற்படங்கள் எடுத்துக் கொள்வீர்;
கவின்மேவும் உயர்வினைகள் பெருஞ் செயல்கள்
காத்திருக்க, வெற்றுணர்வில் மிதக்கின் றீரே!

அருளுடையார் முகம் நினையீர்; புலவர் தொண்டர்
அறிஞர்க்கும் மதிப்பளித்துப் போற்றல் செய்யீர்.
இருள் முகத்துத் திரைப்பரத்தர் நிழற் படங்கள்
இல்முழுதும் மாட்டிவைத்து மகிழ்வு கொள்வீர்!
திருவிழந்த ஒருமுரடன் திரைப் படத்தில்
சிவ வுருவம் பூண்டிருப்பின் அவன் படத்தைத்
திருவழிபாட் டறைநடுவில் மாட்டிவைத்துச்
சிவனென்று தொழுகின்றீர்! மடமை என்னே!

நங்கையருட் பலர், அந்தோ! குடும்பம் பேணும்
நற்கடமை மறந்திட்டீர்! பாங்கழிந்தீர்.
புன்கதையின் திரைப்படங்கள் காண்ப தற்கே
பொழுதெல்லாம் கொட்டகைமுன் தவங்கிடப்பீர்!
தங்கணவர்க் குறு மதிப்பும் சிலர் துறந்தீர்;
தகுமவர்தம் காதலையும் வெறுத்தீர்; ஆனால்
அங்கொருவன் திரைக் கதையில் மறவன் போன்றால்
அழகனென அவற்குள்ளம் நெகிழ்கின் றீரே!

அவனழுதால் நீரழுவீர்! அவன் சிரித்தால்
ஆர்ப்பரித்து மகிழ்கின்றீர்; தாட்கள் தம்மில்
அவனுருவைக் கண்டுவிட்டால் உட்பூ ரித்தே
அணைக்கின்றீர் மார்போடும்; நால்வர் கூடி
அவனழகைப் பெருமிதத்தைப் பேசிப் பேசி
அதிலின்பம் காண்கின்றீர்; நாணம் அற்றீர்!
அவனிறந்தால் நீர் தாலி அறுப்பீர் போலும்!
அரும் பெண்மைப் பீடெல்லாம் அறுக்கின் றீரே!

முப்பதுக்கும் நாற்பதுக்கும் குறைவில் லாத
முதுநடிகை நரைமயிரைப் பிடுங்கிப் போட்டே
இப்பொழுது தான் அகவை பதினெட் டென்பாள்;
இளிக்கின்றீர் அவள்படத்தைக் கண்ணில் ஒற்றி!
அப்பனுக்கும் அப்பனிகர் கிழவன் பெண்பால்
அருவருக்கக் காதல்புரிந் தாடு கின்றான்!
தொப்பை சரிந் திருப்பதுமா காண மாட்டீர்?
துடியிளைஞன் என்றவனைத் தொழுகின் றீரே!

நடிகையர் செய் ஒப்பனையே பெண்டிர்க் கெல்லாம்
நாகரிகம் என்றுரைத்துப் பெண்டிர் பல்லோர்
உடைகுறைத்தும் மூங்கில்உரித் துகில் அணிந்தும்
உலவுகின்றீர் பண்பழிந்து கெடுகின் றீரே!
கடையரிவர் வாழ்க்கையினைப் படங்க ளோடுங்
கதைகதையாய்ப் புகழ்ந்துரைக்கும் இதழ்கள் தேடிப்
படித்துவப்பீர்! கூத்தர், தமைப் புகழச் சொல்லிப்
பணங்கொடுக்கும் உளவதனை அறிகி லீரே!

ஒட்டுமயிர், மழித்தநுதல், புருவம், பொய்ப்பல்,
ஒடுங்குவிழி, வெடித்துலர்ந்த உதடு, நாளும்
கெட்டழிந்த சுவடுகளே முகத்தில் தோன்றும்
கேடுகெட்ட நோய்களெலாம் உள்ளே நாறப்
பட்டாலும், பூச்சாலும் அணிக ளாலும்
பகட்டி யுடல் மினுமினுக்கித் திரியும் இந்தப்
பெட்டைநாய் களையா நீர் எண்ணி, ஏங்கிப்
பேரழகின் உருக்களெனப் பிதற்று கின்றீர்?

கடைகாட்டும் விழிகாட்டி, இளித்தல் காட்டிக்
கச்சிறுகும் புன்மார்பின் பிதுக்கம் காட்டி,
இடைகாட்டி, உந்தி, அடி வயிறும் காட்டி
இழிவாட்ட நடங்காட்டி, விலகும் ஆடை
தொடைகாட்டும் படி காட்டி, மகர்க்குக் கீழ்மைச்
சுவை காட்டி, உருப்படுத்தா வழியைக் காட்டும்
மடிகாட்டிச் சிறுக்கி கட்கோ மெருகைக் காட்டி
மதிக்கின்றீர்? இனியேனும் திருந்து வீரே!

கணவன்றன் தலைமயிரை இழுத்துப் பற்றிக்
காற்செருப்பால் அடித்தவளும், நிலைமை மீறின்
மணவிலக்குச் செய்தவளும் திரையில் தோன்றி
மாண்புமிகு கற்பரசி யாய் நடிப்பாள்.
இணையில்லாக் குடும்பப் பண் புரைத்தாள் என்றே
எந்தமிழீர் பரிசளித்துப் போற்று கின்றீர்!
கணிகைமகள் பரிசதனை ஏற்றுக் கொண்டு
கற்பின் மெய்த் திறம்பற்றிப் பேசு வாளே!

கூறிடுந்தன் பெயர்எழுதத் தெரியா முண்டம்,
குருட்டறிவின் வறட்டுணர்வால், ஒழுக்கக் கேட்டில்
நாறுகின்ற பெடைக் கழுதை, எச்சிற் பண்டம்
நக்கும் நாய், பெருந்தீனிப் பன்றி வந்தே
ஏறுகின்ருள் மேடைமேல்! அவளைப் பார்த்தே
இளிப்பதற்கோர் நாட்டமைச்சன்! அவட்கு வாழ்த்துக்
கூறுதற்கோர் தமிழ்ப் புலவன்! இந்த நாட்டைக்
குண்டாலே அழித்தாலும் எரிச்சல் தீரேன்!

கலைஎன்னும் தெய்வத்தின் உகிர்நுனிப்பும்
கண்டறியார் வெற்ருர்ப்பின் ஆட்டம் காட்டி
விலை கொள்ளும் பரத்தையரைக் கலைஞர் என்றே
விருதளித்து வெளிநாட்டுக் கனுப்பு கின்ருர்.
புலைமகளிர் அங்கும் போய்ப் பாய் விரிப்பார்!
பொறுக்க வொண்ணு முடைநாற்றம்! இப்படித்தான்
கலையுறவை வளர்ப்பாராம் நம் அமைச்சர்!
கழுத்தினிலே சுருக்கிட்டுத் தொங்கல் நன்றே!

அரைசியலின் பலகட்சித் தலைவர் தாமும்
அறிவினையோ தொண்டினையோ நம்ப மாட்டார்;
திரைநடிகர் தமைவிடுப்பார் காசு தண்ட!
தேர்தலிலே வெற்றியெலாம் அவரா லன்ருே?
அரைசியலின் தொடக்கறிவும் வாயாக் கூத்தர்
அழல் வாய்கள் ஒழுக்குகின்ருர் மேடை தோறும்!
புரைமயக்கும் புறப்பகட்டில் மயங்கு கின்றீர்;
பொய்எதுமெய் எதுவென்று புரிகிலீரே!

நடிக்கின்ற கழுதைகளே, உமக்கும் மக்கள்
நலனுக்கும் தொடர்பென்ன? இங்கேன் வந்தீர் ?
இடிக்கின்ற முழக்கமுடன் பீற்று கின்றீர்;
எள்ளளவில் மக்கள்நலம் நினைப்பீ ராயின்
நடிக்கின்ற காட்சிகளில் ஒழுக்கம் பேணி
நல்லுணர்வை அன்ருேநீர் வளர்த்தல் வேண்டும்!
எடுப்பெலாம் குடி, கொள்ளை, காமக் கூத்தாம்!
இவர்வந்து பொதுநலனுக் குழைக்கின்ருராம்!

ஒன்றுல்தம் கலைத்தொழிலில் உண்மை வேண்டும்;
ஒழுக்கமுறு பொதுவாழ்க்கை இருத்தல் வேண்டும்.
அன்றேல்வாய் முடி அவிந் தடங்கல் வேண்டும்;
அழுகலினுல் பிறர்அழுகல் தவிர்த்தல் வேண்டும்.
இன்றேல்வாய் முடியிரோம்! இடித்துரைப்போம்.
இருந்தொண்டர் போல் நடித்தார் தொண்டராமோ?
குன்றேய்பொன் வழங்கிடினும் நலம்போல் செய்கை
குறித்தாலும் சூழ்ச்சிஎன அறிந்தி டோமா?

கொடையளித்தான் அந்நடிகன்; மக்கன வாழக்
குடியமைத்தான் இந்நடிகன்; அரசினர்க்குப்
படைமிகுக்கப் பொன்னளித்தார் நடிகை மார்கள்!
பாரீரோ பெருவண்மை என்பீர்; அந்தோ!
அடைபொருள்கள் உமையன்ருே சுரண்டிப் பெற்ருர்!
அவர்க்களித்து நீர்வறியர் ஆனீர் உண்மை!
முடியஉமை ஏய்ப்பதற்கே மேலும் தந்தார்;
மும்மடங்காம் அறுவடையை மனத்துள் கொண்டே!

ஒவ்வொரு புன் நடிகனுக்கும் ஊர்கள் தோறும்
ஒவ்வொருபுன் கூட்டத்தார்! இவர்கள் தம்முள்
தெவ்வரெனச் சண்டையிட்டுக் கொள்ளும் கூத்தைச்
சிரிப்பதுவா, அழுவதுவா? தெரியவில்லை!
அவ்வவர்க்குத் தன்னறிவும் இலையோ? நெஞ்சால்
அடிமைகளாய் வாழுவதோ? அதிலும் நாட்டில்
எவ்வெவரோ பெரியார்கள் வாழுகின்ருர்;
இழிவுமிகும் நடிகர்க்கா மன்றம் வேண்டும்?

"நடிகரெனில் இழிவாமோ?" என்று கேட்பீர்.
நலஞ்செய்யும் எத்தொழிற்கும் இழிவு கூறேன்.
கெடுமலமே அள்ளிடினும் நல்லோன், மேலாம்!
கீழ்மனத்தன் அமைச் செனினும் இழிந்தோன் என்பேன்.
நடிகனெனின் உயர்கலையை வளர்த்தல் வேண்டும்;
நயமற்ற கோணலினைக் கலைகாண் என்ருல்
அடிவிழுங்காண்! நல்லோர்கள் அழியவில்லை;
அடலிருந்தால் மேடையமை! பேசுவோமே!

சமற்கிருதப் புலம்பல் ....!

இறைக்குருவன்

இந்தியா என்னுஞ் செயற்கை நாட்டினை நிலைப்படுத்திக்கொள்ள இந்தி யென்னும் புன்மொழியைப் பொது ஆட்சி மொழியாக்கியே தீருவேம் என்று செயற்படுத்த முனைந்தும், அவ்வல்லாண்மை முனைப்பினை அறமுறையோடு எதிர்த்த மாணவர்களையும் மற்றவர்களையும் முட்டைப் பூச்சிகளைக் கொல்லுவதுபோல் வேட்டெஃகங்களாற் கொன்று குவித்தும், தாம் அங்ஙனங் கொன்று குவித்தமை முற்றும் அறமுறையே யென்று இழிவழக்குப் பேசியும், இந்தி பயிலும் மாணவர்கட்கு மட்டும் பொதுமக்களை வருத்திப் பெற்ற பொருளில் கோடிக்கணக்கான உருபாக்களை வாரி வழங்கியும், அலுவலங்களில் வேலை பார்க்கும் ஊழியர்களை இந்தி படிக்கும்படி கட்டாயப் படுத்தியும்; மறுப்பின் அவர் தமக்குப் பல்லாற்றானும் இடர் விளைத்தும், தில்லியரும் அவர்தம் அடிவருடும் புல்லியருங் கொடுமை செய்து வருகின்றமையால் நாடே பெருங் கலக்கமுற்றுக் கிடப்பதுடன் அறவுணர்வாளர்களும் அறிஞர்களும் அளப்பிலாத் துயரில் அமிழ்ந்து கிடக்கும் இந்த நேரத்தில், வெளித்தோற்றத்திற்கு இந்தியை எதிர்ப்பது போல் பாசாங்கு செய்துகொண்டு மூலை முடுக்குகளில் பதுங்கி யிருந்து இந்தியைப் பயின்று வந்த குள்ளநரிக் கூட்டம் ஒன்று பெங்களூரில் கூடித் தன் உண்மை வடிவத்தை வெளிப்படுத்தி யிருக்கின்றது.

சமற்கிருதத்தின் தெய்வத் தன்மையை மறுப்பவர்களுக்குத் துயரமே ஏற்பட்டிருக்கிறதென்றும், அம்மொழி யழிந்துவிட்டால் மற்ற எல்லா மொழிகளும் அழிந்துவிடுமென்றும், இந்தியாவின் வேறு எந்த மொழிக்கும் கலை பண்பாடுகளுடன் தொடர்பில்லை யென்றும், அங்ஙனமில்லாமையாற் சமற்கிருதத்தின் இடத்தை வேறு எந்த மொழியும் நிறைவு செய்தல் இயலாதென்றும், பன்னெடுங்காலமாக இந்திய நாட்டைக் கலை பண்பாடுகளின் அடிப்படையில் ஒருங்கிணைத்து வைத்திருக்கும் ஆற்றலாகிய சமற்கிருதத்தை மும்மொழித் திட்டம் அழித்துவிடுமென்றும், அங்ஙனம் முயலுவது ஒருமைப் பாட்டுக்கு அடிக்கப் படும் சாவுமணியாகுமென்றும், சமற்கிருதத்தை வளர்த்துவர நடுவணரசு நடவடிக்கை எடுத்தல் வேண்டுமென்றும், அரசு அமைத்துள்ள சமற்கிருதக் கழகத்துக்கு ஒதுக்கியுள்ள தொகை முழுத்தேவைக்கும்

போதுமானதாக யில்லையென்றும், சமற்கிருதத்தைக் கட்டாய பாட மாக்குதல் வேண்டுமென்றும், இன்னும் பிறவாறும் அக்கூட்டம் அழுது புலம்பியுள்ளது.

முயற்கொம்பினால் செய்யப்பட்ட பெருந்தேரைச் செலுத்த வல்லான் மலடி மைந்தனே என்பதுபோல், இல்லாத- இருக்க முடியாத இந்திய ஒருமைப்பாட்டை இறந்துபட்ட சமற்கிருதமே இதுகாறும் காத்து வந்ததென்றும், இனியும் காக்க வல்லதென்றும், சமற்கிருதம் அழிந்துவிட்டால் உலகிலுள்ள மற்றெல்லா மொழிகளுமே யழிந்துவிடு மென்றும் மொழித்துறையின் முற்றக் கற்ற பெற்றியர் போல் உளறிக் கொட்டியிருக்கின்றனர். எரிகிற வீட்டில் பிடுங்கியது வரவு என்பது போல் மேற்கண்டவாறு இந்தியால் இந்தி பேசாதவர் அலையிடைத் துரும்பாய் அல்லற்பட்டு ஆற்றாது வருந்தும் இந்த நேரத்திலும் அதற்குக் காட்டப்படும் தேசிய ஒருமைப்பாடு என்னும் பெயராலேயே அகப்படும் வரை சுருட்டுகின்ற தன்மையை எண்ணின் நெஞ்சம் வெதும்புகின்றது.

சமற்கிருதத்தில் பொறியியற்கலை நுணுக்கங்கள் பொதிந்து கிடப்பதாகக்கூறி அதனைப் பல்கலைக்கழகங்களில் பாடமாக்குதற்குச் செலவு செய்யும் பொருள் எத்துணை? ஒன்பது மாநிலங்களும், இருபத் தாறு பல்கலைக் கழகங்களும், பிறவும் சமற்கிருதத்தின் சிறப்பு வளர்ச்சிக்குச் செலவிடும் தொகை எவ்வளவு? ஆங்காங்கு வடமொழிக் கழகங்கள் என்னும் பெயரில் இயங்கும் கும்பல்களுக்கு அரசினர் அளிக்கும் உதவித் தொகைக்கு அளவுண்டா? கல்லூரிகளில் சென்று வடமொழி வகுப்பில் சேர ஒப்புக்கொண்ட மாத்திரத்தில் பெரும் பொருளுதவி பெற்று அதன் நெடுங்கணக்கையும் அறியாது கொழுப்புடன் வெளிவரும் மாணவர் எத்தனைப் பெயர்? அங்ஙனம் ஏதுமறியாது வெளிவந்தும் சமற்கிருத வகுப்பில் சேர்ந்த தொன்றே பெருந்தகுதியாகக் கொண்டு அரச நாற்காலிகளில் அமர்ந்து உண்டு கொழுத்துக் களித்துத் திரியும் ஊர்தின்னிகள் எத்தனையர்? ஐயோ! சமற்கிருதத்தின் செல்வாக்கே இன்னணம் கட்டுக்கடங்காத தாய் விரியுமாயின், இந்தியின் செல்வாக்கை விண்டுரைத்தல் இயலுமோ?

இவ்வாறு இரண்டகமாகச் சமற்கிருதத்திற்கும் இந்திக்கும் செலவு செய்யும் பெரும் பொருளில் சிறு பகுதியேனும் தமிழுக்கும்

பிறமொழிகட்கும் செலவு செய்யப்படுகின்றதா? தமிழுக்கும் பிற மொழிகட்கும் செலவிடுவதாகக் கூறப்படும் தினையளவு பொருடானும் வடமொழிக்கு வால் பிடிக்கும் மடவோருக்கே யன்றே செலவிடப்படுகின்றது! குடலுக்குள்ளே யிருந்துகொண்டு உண்ணும் உணவை யெல்லாந் தாமே உண்ணுவதோடு உடலுக்கு நோயும் நலிவும் உண்டாக்கித் துன்புறுத்தும் குடற்புழுக்கள் போல் மக்களைப் பல்லாற்றானும் வருத்திப் பெரும் பொருளைத் திரட்டி அப்பொருளை அவர்தம் நல்வாழ்வுக்குச் செலவிடாமல் இத்தகைய போலிச் செயல்கட்குச் செலவிட்டு இடர் விளைத்துப் பொய்ப் பெருமையும் புன்மகிழ்ச்சியும் அடையும் இப்புல்லியர்களின் கொட்டமும் கூத்தும் ஆணிவேரோடும் அறக்களையும் காலம் சேய்மையிலில்லை யென்பதை அவர்களும் அரசினரும் உணர்வார்களாக!

ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுறிந்து
வேந்தனும் வேந்து கெடும். [திருக்குறள்]

நீங்கள் நெடு நாட்களாக ஆவலுடன்
எதிர்பார்த்திருந்த
சிறுவர் இதழ்!
தனித்தமிழில் வெளிவருகிறது.

?

விரைவில்
முழுவிளக்கமும்
அறிவிக்கப்பெறும்.
தென்மொழி, கடலூர்-1.

தொடர் : ௬

சார்சு வாசிங்டன் கார்வர்

"வழுதி"

அம்மடல் கார்வரின் வாழ்க்கையில் பெருந்திருப்பத்தை ஏற்படுத்தியது. மக்களுக்குத் தொண்டு செய்வதே தம் கல்வியின் பயன் என்று தெளிந்தார். துணை ஆய்வாளர் பணியினின்று அவர் விலகுவது நண்பர்க்கெல்லாம் மிக வருத்தத்தை அளித்தது. எனினும் அவர் மேற்கொண்டுள்ள பணியின் தூய்மையும் பெருமையும் கருதி எவரும் அவரைத் தடுக்கவில்லை.

அலபாமா மாநிலத்தை நோக்கிப் புகைவண்டி சென்றது. கார்வர் வண்டியுள்ளிருந்து இருபுறமும் நோக்கிக் கொண்டிருந்தார். கண்ணுக்கெட்டிய தொலைவுவரை ஒரே பருத்தித் தோட்டங்கள். அவற்றில் ஆயிரக் கணக்கான கருப்பு மக்கள் வேலை செய்துகொண்டிருந்தனர். பருத்தித் தோட்டங்களைப் போன்றே அவர்களின் முகங்களும் வறட்சியாகக் காட்சியளித்தன. பருத்தியைத் தவிர வேறு பயிர்கள் மருந்துக்குக் கூடக் காணப்பெறவில்லை... காய்கறித் தோட்டமோ, ஒன்றுகூட இல்லை. வெள்ளைக்கார வாணிகர்கட்கும் முதலாளிகட்கும் பருத்திதான் பணம் காய்க்கும் செடியாக இருந்தது. பிற பயிர்களைப்பற்றி அவர்கள் கருதவில்லை. உழைக்கும் மக்களின் உணவு பற்றியோ, உடல் நலம் பற்றியோ அவர்கள் கவலைப்படவில்லை. அவர்கள் கவனமெல்லாம் பருத்தி வணிகத்தால் நிறைய காசு கிடைக்கின்றது என்பதில்தான். எனவே ஏறத்தாழ நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து அந்நிலங்களில் பருத்தியே பயிர் செய்யப் பெற்றது. ஒரே பயிர் தொடர்ந்து வந்ததால் நிலம் வறண்டது. வர வர விளைச்சல் குறைந்தது. எனவே மேலும் விளைச்சலைப் பெருக்க அருகிலுள்ள அழகிய காடுகள் அழிக்கப்பட்டன. மரங்களெல்லாம் வெட்டி வீழ்த்தப்பட்டன. அவையும்

நாளடைவில் வறண்டன. காடுகள் குறைந்ததால் மண் அரிப்பு ஏற்பட்டு மேற்பரப்பின் வளமான மண்ணெல்லாம் கோடிக்கணக்கான கல் (டன்) கணக்கில் ஆண்டுதோறும் மழை நீரால் அடித்துச் செல்லப் பெற்றுக் கடலில் வீழ்ந்து வீணாயின. வாணிகர்களின் இரும்புப் பிடிக்குள் அகப்பட்ட ஏழை உழவர்களெல்லாரும் பருத்தி ஒன்றையே பயிரிட்டுப் பயிரிட்டு நல்லுணவு உட்கொள்ள முடியாமல் மேலும் மேலும் கீழ் நிலைக்குத் தள்ளப்பட்டனர். புகைவண்டியிற் சென்று கொண்டிருந்த கார்வரின் நெஞ்சில் இவையனைத்தும் ஒரு நொடியில் தெள்ளத் தெளிவாயின. தாம் என்ன வேலை செய்யவேண்டும் என்பதும் அவர்க்குப் புலனாயிற்று.

வறண்ட அப் பாலைநடுவில் கல்லூரியேனும் ஒரு சோலையாக இருக்கும் என்று எதிர்பார்த்த கார்வர், கல்லூரியும் ஒரு பாலையாக இருப்பதையே கண்டார். வேளாண்மை மாணவர் பதின்மூவர் அங்கிருந்தனர். அவர்களின் அடிப்படை அறிவுக்குத்தானும் வேண்டிய ஆய்வுக் கூடமோ, கருவிகளோ அங்கில்லை. கார்வர் தங்குவதற்குக் கூட மிகச் சிறிய அறை ஒன்றுதான் இருந்தது. அதுவே அவரின் உறையுளாகவும் ஆய்வுக் கூடமாகவும் பயன் படுத்தப் பெறவேண்டும். கார்வர் மனம் சோரவில்லை.

முதல் நாள் பாடம் 'குப்பை மேட்டில்' நடந்தது! ஆம். குப்பை மேட்டில் கிடக்கும் பழைய குப்பிகளையும், கண்ணாடிக் குவளைகளையும் தகரப் பெட்டிகளையும், காதொடிந்த குடுவைகளையும் இழுவைத் (Rubber) துண்டுகளையும் பொறுக்கிச் சேர்த்ததுதான் அன்றைய நாள் பாடம். மாணவர்க்கும் விளங்கவில்லை. மற்றவர்க்கும் இப்புதிய ஆசிரியரின் செய்கை வியப்பாகவும் எள்ளலாகவும் இருந்தது. அது மட்டுமா, பின்னர் கார்வர் மாணவர்களுடன் ஊருக்குள் வீடுதோறும் சென்று இவை போன்றே வேண்டாத குப்பிகள், குவளைகள், கலங்கள், இரும்புத் தகடுகள், தகரக் குழாய்கள் இவற்றையும் வாங்கிச் சேர்த்துக் கொண்டார். இவையெல்லாம் வீணான பொருட்கள் என்று நினைக்கின்றீர்கள். நம் மூளையைச் சற்றே பயன்படுத்தினால் போதும். இவை நமக்கு எப்படிப் பயன்படப் போகின்றன பாருங்கள்!" என்று கூறிக்கொண்டே வேலையைத் தொடங்கினார். மாணவர்களையும் அதில் கலந்து கொள்ளச் செய்தார். கார்வரின் கைபட்ட அப் பழம்பொருட்களெல்லாம் தேய்க்கப்பட்டும், உரசப் பெற்றும், கழுவப் பெற்றும், மாற்றப் பெற்றும் புதுப்புது உருவங்களைப் பெற்றன. எந்தச் சிறு

கருவியும் இல்லாத அந்த இடம் சிறிது நேரத்தில் ஆய்வுக் குழாய்களும் கண்ணாடிக்குடுவைகளும் தொட்டிகளும் வடிகட்டிகளும் விளக்குகளும், வேதியற் பொருட்களை வைக்கும் கலங்களும் நிறைந்ததோர் ஆய்வுக் கூடமாகக் காட்சி யளித்தது. செப்பிடு வேலை போன்ற இச் செயல் அனைவரையும் பெருவியப்பில் ஆழ்த்தியது. இம் முதற்பாடம் பிற்காலத்தில் மாணவர்க்கு நன்கு பயன்பட்டது சிறந்த ஆய்வுகளை நிகழ்த்த விலையுயர்ந்த ஏந்துகள் நிறைந்த ஆய்வுக்கூடம் தான் வேண்டுமென்பதில்லை என்ற உண்மையை அவர்கள் தெரிந்து கொண்டனர்.

கார்வரின் வேளாண்மை வேலையும் தொடங்கியது. அக்கல்லூரிக்குரிய 20 குறுக்கப்(ஏக்கர்) பரப்புடைய நிலத்தில் அதுவரை கிடைத்த விளைவெல்லாம் மொத்தத்தில் ஐந்து மூட்டைப் பருத்திகளும், சர்க்கரை வள்ளிக்கிழங்கு 120 மரக்கால்களும் அன்றன்று கிடைத்த சிறிது 'பெரி' ப் பழங்களுமே! கார்வரும் மாணவரும் நிலங்களை அளந்து, பண்படுத்திப் பாகுபடுத்தி உரமிட்டனர். இப்பொழுது சிறந்த உரம் என்று பயன்படுத்தப்படும் மட்கல் உரத்தைப் பற்றி மேல் நாட்டுக்கு உரைத்தவர் கார்வரே என்று கூறலாம். அவர்தாம் முதன்முதலில் அவ்வுரத்தை உருவாக்கி தசுக்கீசியில் பயன்படுத்தினர். கல்லூரியில் பருத்தியே பயிரிடல் கூடாது என்று கார்வர் கட்டளையிட்டார். அனைவரும் வியப்பும் திகைப்பும் அடைந்தனர். சிலர் கார்வர் மேல் வெறுப்பும் அடையலாயினர். கார்வர் எவரையும் பொருட்படுத்தாமல் சிறந்த எருவாகப் பயன்படும் தழையொன்றினை முதலாண்டிற் பயிரிடலாயினர். சில பயிர்கள் நிலத்திலிருந்து உறிஞ்சிக் கொள்ளும் சாரப் பொருள்களை வேறு சில பயிர்களை விளைவிப்பதினின்று மீண்டும் பெற்றுக்கொள்ள முடியும் என்ற அறிவியல் உண்மையை முதன்முதல் மேலை உலகுக்கு நடைமுறையில் செய்து காட்டியவர் கார்வரே. இரண்டாம் ஆண்டில் சர்க்கரை வள்ளி பயிர் செய்யப்பட்டது. இதற்கு முன்பு கிடைத்ததைப் போல் ஆறுமடங்கு விளைச்சல் கிடைத்தது. மூன்றாவது ஆண்டு பருத்தி பயிர் செய்யப்பட்டது. அப்பொழுது ஒரு குறுக்கப் பரப்பில் ஐநூறு 'பவுண்டு' பருத்தி விளைந்தது. இஃது அப்பகுதியிலேயே அதுவரை கண்டிராத பெரும் விளைச்சலாகும். மக்கள் வியப்புக் கடலில் ஆழ்ந்தனர். கல்லூரியும் கார்வரின் உழைப்பால் மேனிலை எய்தியது. கட்டிடம் அமைத்தல் கிணற்று நீரை ஆய்தல், நிலங்களை ஒழுங்கு படுத்துதல், பூஞ்செடிகளையும் மரங்களையும் பயிரிடுதல், காய்கறித் தோட்டங்களை அமைத்தல் போன்ற

அனைத்து வேலைகளையும் கார்வர் மனமுவந்து ஏற்றுக் கொண்டார். ஆய்வு வேலைகளையும் அவர் மறந்துவிடவில்லை. புற்களை ஆராய்ந்து அவற்றில் விளக்கம் பெறாத நூறு புதிய வகைகளைக் கண்டறிந்து கூறினர் இரவும், பகலும், வகுப்பிலும் வெளியிலும் அவர் மாண வர்க்குப் புதிய செய்திகளைக் கூறிக்கொண்டே யிருந்தார்.

"உங்கள் தனிப்பட்ட நலன்களைப் பேணிக்கொள்வதற்காக நான் இவற்றை உங்கட்குப் புகட்டவில்லை. நம் மக்களை முன்னேக்கி அழைத்துச் செல்லும் பொறுப்பு உங்களைச் சார்ந்தது. அதை நிறை வேற்றுவதுதான் உங்கள் வெற்றியின் அடையாளமாகும். மற்றப்படி அழகிய ஆடைகளோ பணமோ அல்ல" என்று அவர் மாணவர்க்குக் கூறுவார். "மிக எளியவற்றையும் மிக அரிய திறமையுடன் செய்யக் கற்றுக் கொள்ளுங்கள்" என்பார்.

ஆசிரிய வேலை ஒன்றே தனக்குரியது என்று எண்ணவில்லை கார்வர். கல்லூரிக்குப் பொருள் திரட்ட ஊர் ஊராகச் சென்று இசை மீட்டினர். மக்களின் துன்ப நெஞ்சங்கட்கு அவர் இசை மருந்தாகவும் அமைந்தது.

அவரிடத்துப் பயின்ற மாணுக்கருக்கு மட்டுமல்லாமல் ஏனைப் பொதுமக்கட்கும் கூட வேளாண்மை அறிவும் நடைமுறைப் பயிற்சியும் எத்துணை இன்றியமையாதன என்பதை உணர்ந்த கார்வர் அவர்கட்கும் பணி செய்ய விழைந்தார். கல்லூரியிலே 'உழவர் நிலையம்' ஒன்றமைக்கப்பட்டது. காய்கறிகளின் சிறப்பையும் பழங் களின் பயனையும் அம்மக்கள் – ஏன், அந்நாட்டின் மருத்துவர்களும், அறிவியலாளரும் கூட உணராத காலம் அது. கார்வர்தாம் முதன் முதலில் அவற்றின் உயர்ந்த பயன்களை எடுத்துரைத்து உணவில் அவற்றின் இன்றியமையாமையை விளக்கினர். உண்ணத் தகாத நஞ்சென்று கருதப்பட்ட தக்காளிப் பழத்தை முதன்முதலில் உண்டு காட்டியவர் கார்வரே! ஆயிரக் கணக்கில் உழவர்கள் வந்து கார்வரின் அறிவுரைகளைக் கேட்டுப் பயனடைந்தனர். ஆயினும் கார்வரின் மனம் நிறைவடையவில்லை. அங்கு வரமுடியாத பல்லாயிரக் கணக் கான ஏழை உழவர்கள் மூலை முடுக்குகளிலும் சந்து பொந்துகளிலும் வாழ்வது அவருக்குத் தெரியும். அவர்களையும் அணுக விழைந்தார்.

கோவேறு கழுதை பூட்டப்பெற்ற கட்டை வண்டி யொன்றில் சில கருவிகள், விதைகள், விளக்கத்துக்குத் தேவையான செடித்தொட்டிகள் இவற்றை ஏற்றிக் கொண்டு கார்வர் சந்திகளிலும் தெரு முனைகளி

லும் ,சந்தைக்கடையோரங்களிலும் தம் ஆக்கவேலைகளை ஊக்கமுடன் தொடங்கினார். முதலில் புறக்கணித்து நகைத்தவர்கள் விரைவில் அவரைச் சூழ்ந்து கொண்டனர். என்னருமை மக்களே... நீங்கள் வறுமையில் உழல்கின்றீர்கள். இது நீங்கள் ஏற்படுத்திக் கொண்டது தான்.'' நான் சொல்லும் முறைகளைக் கேட்டு நடந்தால் நீங்கள் உங்கள் வறுமையை எளிதில் ஒழிக்க முடியும். உங்கள் அடிப்படைக் குறைபாடுகளை முதலில் நீக்கிக் கொள்ளுங்கள். எப்பாடுபட்டேனும் ஒரு நாளைக்கு ஐந்து காசுகளாவது சேர்த்து வையுங்கள். ஓராண்டு ஈராண்டு தொடர்ந்து செய்து பாருங்கள்'' என்று அவர்களை மன்றாடிக் கேட்டுக் கொள்வார். ''உழைப்பு மட்டும் போதாது. அஃது ஒழுங்கு படுத்தப் படவும் வேண்டும், பயிர் செய்தால் மட்டும் போதாது, வகையறிந்து பயிரிட வேண்டும். உண்டால் மட்டும் போதாது பொருந்தும் உணவை உண்ண வேண்டும்'' என்று அறிவுறுத்தினார். கார்வர் வாய்ப்பேச்சாளர் மட்டுமல்லர். அவர்கட்குப் புதிய முறைகளைப் பொறுமையுடன் பயிற்றுவித்தார். காய்கறி விதைகளைக் கொடுத்துப் பயிரிடச் சொன்னது மல்லாது, அக்காய்கறிகளை என்ன செய்வது என்று தெரியாமல் விழித்த பெண்கட்கு, அவர்கள்தம் சமையல் அறைகளிலே சென்று அவற்றைச் சுவையாகச் சமைக்கும் முறைகளையும் கற்றுக் கொடுத்தார் கார்வர். எந்தப் பொருளும் வீணன்று என்பது அவர் கொள்கை. விடுகளில் வீணடிக்கப்பட்ட பொருள்களெல்லாம் எத்துணைப் பயனுடையவை என்பதை அவர்கட்குச் செய்து காட்டினார். இதுவரை வீண் என்று எறியப்பட்ட பன்றிக் கொழுப்பு சவர்க்காரமாகப் பயன் படுதலைச் செய்து காட்டினார். சர்க்கரை வள்ளிக் கிழங்கில் தள்ளப்பட்ட வற்றிலிருந்து பசைமாவினைச் செய்து கொடுத்தார். பைன்மா இலைகளும், இன்னும் பல சக்கைகளும் பாய்களாகவும் திரைகளாகவும் பின்னப்பட்டன. இயற்கையின் பயன்களை மட்டுமன்று, எழிலையும் அம்மக்கட்கு உணர்த்த முயன்றார் கார்வர். கார்வரின் செயல்கள் வெள்ளைக்கார உழவர்கட்கு எரிச்சல் ஊட்டின. நம்மினும் கருப்பர்கள் சிறந்து விளங்குவதா என்று பொருமையுற்றனர். ஆயினும் கார்வரின் அமைதியும், வெறுப்பின்மையும் அவர்களையும் பணிவித்தன. விரைவில் வெள்ளை உழவர்களும் கார்வரைச் சுற்றிக் குழுமலாயினர். கார்வர் அவர்களையும் அன்புடன் வரவேற்றார்.

கார்வரின் புதிய முறைகள் உலகெங்கும் தெரியவந்தன. இந்தியா, உருசியா, சீனம், சப்பான், ஆப்பிரிக்கா, தென்னமெரிக்கா

The Jubilance of the Daughter-in-law!

-Barathidasan.

You sway like a tender co-co-nut leaf
That swings and quivers in the breeze
What is the cause of your jubilance
You lightning-waisted wench?
Your legs rest not; your golden form
Is gliding like the waves of sea.
Is it the return of my son
Who was away from home for long
That gives you such ebullition of joy?

You change your saree frequently,
You buy some flowers for your hair.
You flit about like the wind and with a beaming face
You peep at the mirror, come hopping back.
I saw nothing like this yesterday;
But why such jubilance to-day
O girl with eye brows long with the crescent on?
Is it because my son has come back home
You have such ebullition of joy?

You run and call the greens that sell in the street,
Though all the cooking's done!
That ring on your little finger you gaze upon and glow
With secret joy and press your lips to it
And send wistful glances into the room
Yesterday you weren't like this
But what a jubilance to- day!
Is it the return of my son from the distant town
That gives you this ebullition of joy?

You look at your bosom with wide-eyed joy
You adjust your bangles now and then.
While shelling beans, you run to the front of the house.
And run back, your anklets sounding all the while.
And you prattle like a parrot green.
Such behaviour you have never shown before.
But why to-day this jubilance?
Is it the arrival of my son at home
That gives you this ebullition of joy?

ம. இலெ. தங்கப்பா. எம். ஏ. பி. டி.

மருமகள் பூரிப்பு !

பாவேந்தர் - பாரதிதாசன்.

தென்றல் அடிக்கையில் பச்சிளங் கீற்றுச்
சிலிர்த்து நிலைகுலைந் தாடுதல் போல்
இன்றைக்கு நீ கொண்ட பூரிப்பின் காரணம்
என்னடி மின்னல் இடைச் சிறுக்கி ?
நின்ற உன் கால்கள் நிலைக்கவில் லை, கடல்
நீராய் நெளிந்தது பொன்னுடலும் !
அன்றைக்குச் சென்றவன் - என் மகன் - வீட்டை
அடைந்த மகிழ்ச்சித் திருக் கூத்தோ ?

மாற்றி யணிவதும் சேலையினை, மலர்
வாங்கி யணிவதும் கூந்தலிலே, ஒரு
காற்றென ஓடிச் சிரிக்கும் முகத்துக்குக்
கண்ணாடி காட்டிப் பின் மீளுவதும்
நேற்றில்லை யே! இன்று பூரிப்ப தென்னடி
நீள்புரு வத்து நிலாப்பிறைச்சி ?
வேற்றூர்க்குச் சென்றவன் என் மகன் வீட்டுக்கு
மீண்ட மகிழ்ச்சித் திருக் கூத்தோ ?

கறிகள் சமைத்தபின் தெருவினில் விற்றிடும்
காய்களை ஓடி அழைப்பதுவும்
சிறுவிரல் மோதிரம் பார்ப்பதும், பார்த்து
மகிழ்வதும் செவ்விதழ் சேர்ப்பதுவும்,
அறையினை நோக்கலும் நேற்றில்லையே, நீ
அப்படிப் பூரிப்ப தேதுக்கடி ?
பிறநகர் சென்றவன் - என் மகன் - ஊர்வரப்
பெற்ற மகிழ்ச்சித் திருக் கூத்தோ ?

கச்சையை நோக்கலும், கண்கள் மலர்வதும்,
கைவளை யைச்சரி செய்வதுவும்,
மொச்சை உரிக்கையில் முன்கட்டில் ஓடி, மு
ழங்கும் சிலம்படி மீளுவதும்,
பச்சைப் பசுங்கிளி தானெனக் கொஞ்சலும்
பார்த்தில னே, இன்று பூரிப்ப தேன் ?
அச்சீமை சென்றவன் – என் மகன் - வீட்டை
அடைந்த மகிழ்ச்சித் திருக் கூத்தோ ?

எழுக, தமிழா!

மகிபை - பாவிசைக்கோ ..

ஒற்றுமைப் புரட்டுப் பேச்சால்
　　உயர் தமிழ் உரிமை மாய்த்து
முற்றிலும் இந்திப் பேய்முன்
　　முடக்கினர் வடக்கர்; தீப்போல்
பற்றி, நம் பண்பை மாய்த்தார்
　　பார்ப்பனர்; இனியும் இந்திக்
கொற்றவர் தொடர்பேன்? சீறிக்
　　குதித்தெழு தமிழா இன்றே!

வையத்தை அளந்தார் முன்னோர்
　　மாண்சிறு குறளால்; நாமோ
மையொத்த நெஞ்சப் பார்ப்பார்,
　　வடக்கரின் சூழ்ச்சிப் போக்கென்
கைவைத்த கனியைக் கூடக்
　　காணுமா றிலையே! – தாழ்வுப்
பொய்வைத்த மானந் தன்னைப்
　　பொசுக்கிடு தமிழா இன்றே!

பனிமலை முடியைத் தேய்த்த
　　பழந்தமிழ்ப் பெருவாழ் வெங்கே?
குனிந்து செற் றாரை நாளும்
　　கும்பிடும் சிறுவாழ் வெங்கே?
பிணி,மிடித் துன்பில் தோய்ந்து
　　பேழையுள் அரவம் போன்றோம்;
இனிமையா இழிநாய் வாழ்க்கை?
　　எழுக செந் தமிழா இன்றே!

தூங்கினான் தமிழன்; பாரில்
　　தாழ்ந்தனன்; தாயும் தாழ்ந்தாள்;
ஏங்கினான்; வடக்கை நோக்கி
　　ஏந்தினான் கையை; - முன்னர்
"ஓங்கினான் உலகை ஆண்டான்
　　ஒருவனே" என்னும் சொல்லின்
நீங்கினான் என்றே பின்னோர்
　　நகைப்பராம்; எழுக இன்றே!

துறைதொறும் நரிகள் போலச்
சூழ்ந்தனர்; தமிழைக் காக்கும்
இறுதிநாள் இதுவே! வாளா
இருந்திடில் எழவே மாட்டோம்;
உறுதியை நெஞ்சிற் கொள்க;
உரிமையை வாயாற் சொல்க;
அறுதியை மீறின் ஓங்கி
அறைக, செந் தமிழா இன்றே!

உரிமை வெம் பசிகொண் டார் முன்
ஒருபிடி உணவை வீசிப்
பெருவளம் குவித்தோம் என்றே
பிதற்றினர் வடக்கர்; 'ஆம் ஆம்
அருமை' என் றழுவார் கோல்முன்
ஆடிடும் குரங்கர்; அன்ன
எருமைகள் நம்மை ஆளும்
இழிவினைத் துடைப்பாய் இன்றே!

'தமிழரா திறலார்?' என்றே
தருக்கினர் வடக்குப் புல்லர்;
இமிழ்கடல் நடுங்கச் சீறி
எழுந்து, நம் மறத்தைக் காட்டி
உமிழ்கதிர்ப் பரிதி முன்னர்
உலாவரு பனிபோல், அன்னார்
அமிழுதல் திண்ணம் என்றே
அறைந்திடு தமிழா இன்றே!

முடவரின் கீழோர்; சற்றும்
முயல்கிலா மடியர்; மற்றும்
இடர் வரின் எழுச்சி குற்றும்
இழிநிலைப் படியர்; எற்றும்
வடவரின் அடியைச் சுற்றி
'வாழ்குநர்' என்னும் செற்றார்
குடர்சரித் திடுவோ மென்றே
கொதித்தெழு தமிழா இன்றே!

முத்தமிழ்த் திறங்கள், நாணில்
　　மடமையும் ; பகைவர் தம்மை
நத்திடும் இழிவும் ; கீழ்நாய்
　　அடிமையும் என்றே எண்ணும்
எத்தரைப் பணிகின் றுயே !
　　எலும்பொடு தசைவே றுகப்
பிய்த்துடன் கொல்வாய் ; தெவ்வர்
　　பிணமலை குவிப்பாய் இன்றே !

செந்தமிழ் உரிமை மாய்க்கத்
　　திறமிலா 'நந்தாக் கும்பல்'
முந்திஞல் முடியுங் கொல்லோ !
　　முள்கனல் அவியுங் கொல்லோ !
சிந்துவர் செந்நீர் ; யாவர் ?
　　செந்தமிழ் மக்கள் அல்லர் ;
முந்திடும் வடக்கர் என்றே
　　முழங்கிடு தமிழா இன்றே !

தென்மொழி, கடலூர்-1.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள் நாடு	கொழும்பு	வெளி நாடு
ஆண்டுக் கட்டணம்	6 உருபா	7–25 உருபா	9 உருபா
தனி இதழ்	50 காசு	60 காசு	75 காசு

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

விளம்பரம்

அட்டை நான்காம் பக்கம்	(இரு வண்ணம்)	100 உருபா
,, ,,	(ஒரு வண்ணம்)	75 உருபா
உள்ளே முழுப்பக்கம்		50 உருபா
,, அரைப்பக்கம்		25 உருபா

தொடர்ந்த விளம்பரங்கட்கு எழுதுங்கள்.

ஓரிதழுக்கு ஓர் உருபா முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

நூற் சுருக்கம்

பண்டைத் தமிழ நாகரிகமும் பண்பாடும்.

மொழி நூற் பேரறிஞர் பண்டித, புலவ, கலைத்தலைவர்.

ஞா. தேவநேயப் பாவணர் எழுதியது.

உறையுள் : குறிஞ்சிநில வாணரும் பாலைநில வாணரும் இலை வேய்ந்த குடிசைகளிலும் குற்றில்களிலும், முல்லைநில வாணர் கூரை வேய்ந்த சிற்றில்களிலும், மருதநிலச் சிற்றூர் வாணரான உழவர் மண்சுவர்க் காரை வீடுகளிலும், வதிந்தனர். மருதநிலப் பேரூர் வாணர் ஏந்தான பச்சைச் செங்கற்சுவர்க் காரை வீடுகளிலும் வாழ்ந்து வந்தனர். சிறியதும் பெரியதும் உயர்ந்ததும் தாழ்ந்ததும் அல்லாது நடு நிகர்த்தான உறையுள், குடி, மனை, இல், வீடு எனும் சொற்களுள் ஒன்றால் குறிக்கப் பெறும். இல்லம், வளமனை, மாளிகை நகர் என்பன செல்வர் வாழும் சிறந்த உறையுளைக் குறிக்கும். அரசர் மாளிகை அரண் பெற்றிருக்குமாதலால் அரண்மனை எனப் பெயர் பெறும். குடி, நகர், மாளிகை என்னும் தூய தமிழ்ச் சொற்கள் வடமொழிச் சென்றும் வழங்குகின்றன. மேனிலையுள்ள வீடு மாடம் எனப்பட்டது.

ஊர்தியும் போக்குவரத்தும் : நிலவூர்திகள் அணிகம், வண்டி, விலங்கு என மூவகைப்படும்.

அணிகம் : சிவிகை, பல்லக்கு, மேனா, சப்பரம் என்பன. சிவிகை, இருவர் காவிச் செல்லும் கூண்டுப் பல்லக்கு. பல்லக்கு, எண்மருக்குக் குறையாது தோளில் தாங்கிச் செல்லும் திறந்த தண்டையப் படைப் பல்லக்கு. சப்பரம், உருளியின்றி ஒற்றைத் தட்டுள்ள சப்பை (மொட்டை) த்தேர்.

சிவிகை, பல்லக்கு தென் சொற்களே.

வண்டி : சகடம், கூடாரப் பண்டி, கொல்லாப் பண்டி, வையம் பாண்டில், வங்கம், தேர் என்பன. சகடம் பொதுவகையான மாட்டு வண்டி; கூடாரப்பண்டி கூண்டுவண்டி; கொல்லாப்பண்டி சிறந்த

காளைகள் பூட்டப் பெற்றதும் பெருமக்கள் ஏறிச் செல்வதுமான நாகரிகக் கூண்டு வண்டி. வையம் இரு குதிரை பூண்டிழுக்கும் தேர் போன்ற வண்டி. பாண்டில் ஈருருளியுள்ள' குதிரை வண்டி. வங்கம் பள்ளியோட வண்டி. அது பள்ளியோடம் போன்றது. தேர் இக் காலத் தேர்போற் சிறியது.

விலங்கு : காளை, குதிரை, கோவேறு கழுதை, யானை, ஒட்டகம் என்பன.

நீருர்திகள் : புணை, பரிசல், கட்டுமரம், ஓடம், அம்பி, திமில், பஃறி, தோணி, படகு, நீர்மாடம், (பள்ளியோடம்) நாவாய் என்பன. நாவாய், வங்கம், கப்பல் என்பன சிறிது வேறுபட்டவையாயுமிருக் கலாம்.

வாழ்க்கை வகை:

உலக வாழ்க்கை, இல்லறம், துறவறம், தனிவாழ்க்கை என மூவகைப்படும்.

இல்லறம் : மணப்பருவம் வந்த பின்பே, பல வகையிலும் ஒத்த ஓர் இளைஞனும் இளைஞையும், தாமாகக் கூடியோ, பெற்றோரால் கூட்டப்பட்டோ கணவனும் மனைவியுமாகி வாழ்வது, ஆரிய வருகைக்கு முற்பட்ட பண்டைத்தமிழ மரபு.

அம்மான் மகளும் அக்கை மகளும்போல் மணக்கக் கூடிய உறவுமுறைப் பெண் உரிமைப்பெண். உறவு முறையின்றிச் செல்வக் குடும்பத்தினின்று எடுக்கும் பெண் பெருமைப் பெண். இரண்டும் அன்றி ஒருவன் தானே கண்டவுடன் காதலித்து மணக்கும் பெண் உழுவற்பெண்.

துறவறம்: பல காரணங்களால் துறவு பூணப் பெறும். ஆண்டி, பண்டாரம், அடிகள், முனிவன், சித்தன் எனத் துறவியர் பல வகையர். ஆண்டி, இரப்போன்; பண்டாரம் நிரம்பக்கற்ற பண்டிதன். அடிகள் உள்ளத்தூய்மையும், ஆவிக்குரிய செய்திகளில் பட்டறிவும் வாய்ந்தவர் இம் மூவரும் நாட்டிலிருப்பவர். முனிவரும் சித்தரும் மலையிலிருப்பவர். முனிவர் அல்லது முனைவர் உலகப்பற்றை வெறுத்தவர். முனிதல், முனைதல்—வெறுத்தல்.

ஐயன் என்னும் சொல்விளக்கம்:

அள்–செறிவு. அள்ளல்–நெருக்கம்.

அள்ளிருள் – செறிந்த இருட்டு.

சேரே திரட்சி: (தொல் 846) என்னும் நெறிமொழிப்படி செறிவுக் கருத்தினின்று பெருமைக் கருத்துத் தோன்றும்.

மொய்த்தல்–நெருங்குதல். மொய்–பெருமை.

ளகர மெய்யீறு யகர மெய்யீறுகத் திரிதல் செருவழக்கு.

எள் (இளை)–எய் கொள்–கொய். வெள்–வெய்.

அய் என்பது 'ஐ' யாகும்

ஒப்பு நோக்க: வள்–(வய்)–வை.–கூர்மை.

பொள்–பொய். (பய்)–பை–உட்டுளையுள்ளது.

இந் நெறிமுறைகளின்படி அள்–(அய்) ஐ ஆகும்.

ஐ–பெருமை. பெரியோன், தந்தை, ஆசிரியன், தலைவன், அரசன், கணவன்.

ஐ–ஐயன்–பெரியோன்.

உறவினரல்லாத மூத்தோரையும் உயர்ந்தோரையும் ஐயா என்று விளிப்பதே தொன்று தொட்ட தமிழ் மரபு. இஃது ஆரிய இனமே உலகத்தில் தோன்று முன் குமரிக் கண்டத்தில் தோன்றிய வழக்கு. ஐயன் என்பதன் பெண்பால் ஐயை. ஐயை–தலைவி, ஆசிரியை, துறவினி,காளி.

இங்ஙனம் ஐயன் ஐயை எனும் சொற்கள் தூய தென் சொற்களாயிருப்பவும், அவற்றை முறையே ஆர்ய, ஆர்யா என்னும் இருபாற் பெயரினின்று தோன்றியிருப்பதாகக் கூறுவது பிராமணரின் குறும்புத் தனத்தையும், தமிழ்ப்பேராசிரியரின் அறியாமையையும் அடிமைத் தனத்தையும் எத்துணைத் தெளிவாகக் காட்டுகின்றது!

பண்டாரம் என்னும் சொல்லும் தென் சொல்லே. பண்டாரம் களஞ்சியம். பல நூல்களைக் கற்ற பண்டிதன் ஓர் அறிவுக் களஞ்சியம் போலிருப்பதால் உவமையாகு பெயராய்ப் பண்டாரம் எனப்பட்டான்.

பண்டம் பொருள். பண்டம்—ஆரம்–பண்டாரம்.

ஒ. நோ: வட்டம்—ஆரம்–வட்டாரம்.

சித்தர், அறிவர் என்றும் சொல்லப்படுவர். சித்து–அறிவு.

செத்தல்–கருதுதல்; அறிதல்.

செந்து–கருதி.செ–செத்து (தொழிற் பெயர்)கருத்து, அறிவு.

ஒ நோ: ஒ–ஒத்து.

செத்து–சித்து ஒ. நோ. செந்தூரம்–சிந்தூரம்.
சித்து என்னும் தென்சொல்லும் சித்தி (Siddhi) என்னும் வட சொல்லும் வெவ்வேறும். சித்து–அறிவு. சித்தி–கைகூடுதல்

தமிழ், இலக்கண மருத்துவ முதனூல்களை இயற்றியவர் முனிவரும் சித்தருமே. தமிழ் மருத்துவம் சித்த மருத்துவம் எனப்படும்.
பொன்னாக்கமும் (இரசவாதமும்) சித்தர்கலையே.

சமய வொழுக்கம்:

சமயம் என்பது மதம். அஃது ஒரு வகைச் சமைவைக் குறித்தலால் சமயம் எனப்பட்டது. சமைதல் நுகர்ச்சிக்குப் பதமாதல். பல்வகைச் சமைவுகளுள்ளும் ஆதன் இறையடிமையாகச் சமைவது தலைசிறந்த தாதலால் சமைவு எனும் வினை அதனையே சிறப்பாகக் குறிக்கும் ஆயினும், பொருள் மயக்கமில்லாவாறு, சோறு சமைவது சமையல் என்றும், பெண் சமைவது சமைதல் என்றும், நேரம் சமைவது சமையம் என்றும், ஆதன் சமைவது சமயம் என்றும் வேறுபடுத்திச் சொல்லப்படும்.

ஆரியர் வருமுன்னே தமிழர் சமயத் துறையிலும் தலைசிறந் திருந்தனர்.

குறிஞ்சித்திணைத் தெய்வம் சேயோன். சேயோன், சிவந்தவன் சேந்தன் எனும் பெயரும் அப் பொருளதே. முருகன், வேலன், குமரன் என்னும் பெயர்களும் இவனுக்குண்டு. **சிவன் என்பது சேயோன் என்பதன் உலக வழக்கு வடிவம்.**

இப் பெயர் வடிவு வேறுபாட்டைக்கொண்டு பிற்காலத்தில் ஆரியர் ஒரே தெய்வத்தை இரண்டாக்கித் தந்தையும் மகனுமாகக் கூறி விட்டனர். குமரன் என்பதற்கும் சேய் என்னும் குறுக்கத்திற்கும் மகன் என்று தவறாகப் பொருள் கொண்டதே இதற்கு அடிப்படை.

சிவன் என்று ஆரியத் தெய்வம் ஒன்றுமில்லை.

சிவ என்னும் சொல் நல்ல அல்லது மங்கல என்னும் பொருளில் உருத்திரனுக்கும் இந்திரனுக்கும் அக்கினிக்கும் பொதுவான அடை மொழியாகவே ஆரிய வேதத்தில் வழங்கிற்று,

முல்லைத் தெய்வம் மாயோன்: மாயோன் கரியவன். மா–கருப்பு கண்ணன் பிறக்குமுன்பே கிருட்டிண (Krishna) என்னும் சொல்

கருப்பு எனும் பொருளில் இருக்கு வேதத்தில் வழங்கிற்று. கிருட்டிண (Krishna) என்னும் சொற்கு வேதமொழியில் வேரில்லை. தமிழிலேயே உள்ளது.

பாலைத் தெய்வம் காளி: காளி—கருப்பி. கள்—கள்வன்—கரியவன் கள்—காள்—காழ்—கருமை. காள்—காளம்—கருமை. காள்—காளி. கருப்பி, கருப்பாய் என்னும் காளியின் பெயர்களைப் பெண்டிர்க்கு இடுவது பெரு வழக்கு.

அங்காளம்மை என்பது அழகிய காளியம்மை என்னும் பொருளது.

ஆரியர் வருமுன் வட இந்தியா முழுவதும் திராவிடர் பரவியிருந்ததினால் வங்க நாட்டில் காளிக் கோட்டம் ஏற்பட்டது.

மருதத்தெய்வம் வேந்தன்: வேந்தன்—அரசன்.

முற்காலத்தில் அரசனும் தெய்வமாக வணங்கப்பட்டான். அதனால் இறைவன் என்னும் பெயர் அரசனுக்கும், கடவுட்கும் கோவில் என்னும் பெயர் அரண்மனைக்கும் தெய்வக் கோட்டத்திற்கும் பொதுவாயின. வேந்தன் இறந்தபின் வானவர்க்கும் அரசனாகி வானுலகத்தினின்று மழையைப் பொழிவிக்கின்றான் என்று பண்டை மருதநில மக்கள் கருதியதால் மழைத் தெய்வத்தை வேந்தன் என்னும் பெயரால் வணங்கி வந்தனர்.

ஆரியர் வருமுன்பே, மொழி வேறுபாட்டினால் வேந்தனுக்கு வட நாட்டில் வழங்கி வந்த பெயர் இந்திரன் என்பது. இந்திரன் அரசன். ஆகவே இரண்டும் ஒரு பொருட் சொற்களே. வேத ஆரியர் இந்திர வணக்கத்தை, வடநாட்டுத் திராவிடரைப் பின்பற்றியே மேற்கொண்டிருத்தல் வேண்டும். மேலையாரிய நாடுகளில் இந்திர வணக்கமே யிருந்ததில்லை என்று மாக்சு முல்லர் கூறியிருப்பது இங்குக் கவனிக்கத் தக்கது.

இந்திர விழா தமிழர் வேந்தன் விழாவே.

வாரணன் கடல்தெய்வம்: வாரணம்—கடல். முதற்காலத் திராவிடர் வடமேற்காய்ச் சென்று கிரேக்க நாட்டில் குடியேறியபின் வாரணம் என்னும் சொல் Ouranos எனத் திரிந்தது. அத் தெய்வம் முதலில் கிரேக்கர்க்குக் கடல் தெய்வமாகவே யிருந்து பின்பு வானத் தெய்வ மாயிற்று.

கிரேக்கத்துக்கு மிக நெருங்கிய மொழியைப் பேசி வந்த கீழை யாரியருள் ஒரு பிரிவாரான வேத ஆரியர் கடலை யறியாமல் நெடுக வும் நில வழியாகவே வந்ததினால் மழைத் தெய்வத்தையே 'வருணு' என அழைத்தனர்.

கடவுள்நெறி: ஊர், பெயர், குணங்குறியற்று, மன மொழி மெய் களைக் கடந்து எங்கும் நிறைந்திருத்தல், எல்லாம் அறிந்திருத்தல், எல்லாம் வல்லதாதல், என்று முண்மை, அருள்வடி வுடைமை, இன்ப நிலை நிற்றல், ஒப்புயர் வின்மை, மாசுமறு வின்மை, ஆகிய எண் குணங்களை யுடையதாய் எல்லா வுலகங்களையும் படைத்துக் காத்து அழித்து வரும் ஒரு பரம்பொரு ளுண்டென்று நம்பி, அதனை வழி படுவதே கடவுள் நெறியாம். இது சித்தமதம் எனவும் படும். திரு வள்ளுவர் கூறியிருப்பது உருவமற்ற கடவுள் வழுத்தே!

உழவு: ஒரு நாட்டு வாழ்விற்கும் முன்னேற்றத்திற்கும் அடிப்படை உழவு என்பதைப் பண்டைத் தமிழ் மக்கள் உணர்ந்திருந்தனர். மருதம் நெய்தல்—மென்புலம். குறிஞ்சி, முல்லை—வன்புலம். மருதநிலத்தை நாடு என்றும் மற்ற நிலங்களைக் காடு என்றும் அழைத்தனர். குறிஞ்சி நிலத்தில் உழத்தக்க இடத்தை ஏர்க்காடு என்றும், தகாததைக் கொத்துக்காடு என்றும் பகுத்தனர். குறிஞ்சி, முல்லை விளைநிலங்கள் கொல்லை அல்லது புனம் என்றும், மருத விளைநிலங்கள் செய் என்றும், புதுக் கொல்லை 'இகை' என்றும், பழங் கொல்லை 'முகை' என்றும் பெயர் பெற்றன. கொல்லை என்பது வானவாரிக்காடு. புன்செய் கிணற்றுப் பாய்ச்சல். நன்செய் ஆற்று, அல்லது ஏரிப் பாய்ச்சல். எள், கொள் கொல்லைப்பயிர். கேழ்வரகு, சோளம் புன்செய்ப் பயிர். நெல், கரும்பு நன்செய்ப்பயிர். நன்செய்களுள் பழமை யானது பழனம். போரடிக்கும் களமுள்ளது கழனி. பண்ணை, பண்ணப் பட்டது. சேறுள்ளமையால் செறு என்றும், வைப்புப் போன்றமையால் வயல் என்றும் நன்செய்க்குப் பெயர்கள் உண்டு.

ஏர்த் தொழிற்கு உதவுவது ஏரி. குளிப்பது குளம். இயற்கையாக உண்டான ஏரி அல்லது குளம் பொய்கை யாம். எருதுகளைக் கொண்டு கிணற்று நீரை இறைக்கும் ஏற்றம் கம்மாலை எனப்பட்டது. அம்—நீர்,—அம்—கம்—நீர். கம் — ஆலை } கம்மாலை. ஆலை சுற்றிவருவது. ஆலுதல், ஆடுதல். கம்மாலை இன்று கமலை என்றும் கவலை என்றும் திரிந்து வழங்குகின்றது.

அகம், அகரம்–மருதநிலத்தூர்.

ஒ. நோ. L. Agros. field E. acre,

ஏர்–E. ear, to plough M E. eren.

A S. erian Ice. erja. Goth. Arjan.

L. Arare. Gk. arow. I. plough.

Ir. araim–I. plough.

E. arable—ploughable.

earth: that which is ploughed. Root–ar.

ஏர் என்னும் சொல் வடமொழியிலின்மை கவனிக்கத் தக்கது.

காறு (கொழு) As. Scear. M E. Schar.

Ger. Schare, schaar. E. Share.

தொள் (தோண்டு) A. S tilion E. till.

தொள்–தொழு–தொழில். உலக முதல்தொழில் உழவே.

கல்.–(தோண்டு) L. colere, to till.

கல் என்னும் வினையினின்று கல்வி என்னும் சொல் தோன்றியது போன்றே Colo என்னும் வினையினின்று Cultivation Culture என்னும் சொற்களும் ar (உழு) என்னும் வினையினின்று ars. artis (art) என்னும் சொற்களும் தோன்றி யுள்ளன. உலக முதற் கல்வியும் உழவே.

புல்லம்: (எருது) M E. Bole. or. boli. M L G, M. Du. Bulle.

E. Bull

வாணிகம்:

பட்டினம் என்னுஞ்சொல் :கடற்கரை உள்நாட்டை நோக்க மிகத் தாழ்ந்த மட்டத்தில் இருப்பதால் துறைநகர்கள் பட்டினம் எனப் பட்டன.

பதிதல் — தாழ்ந்திருத்தல். பதி – அனம் – பதனம்—பத்தனம்

பட்டனம்—பட்டினம்.

இனி, பதனம் என்பது கலங்கள் சேதமின்றிப் பாதுகாப்பாயிருக்கு மிடம் என்றுமாம். பதனம் – பாதுகாப்பு. (தொடரும்)

உறுப்பினர்கள் கவனிக்க.

பணம் விடுக்கும் பொழுது உறுப்பினர்கள் தங்களின் உறுப்பினர் எண்களைத் தவறாது குறிப்பிட வேண்டுகின்றோம். முகவரி மாற்றஞ் செய்ய விரும்புவார் தம் புதிய முகவரியோடு, பழைய முகவரியையும் குறிப்பிட வேண்டுகின்றோம். – அமைச்சர்.

தமிழ்ப் பெயர் சூட்டுக!

மணி வேலன்.

'பெரு நோக்கு' வேண்டுந்தான்; ஆனாலும் பெண்கள்
'பெரு நோக்கை'க் கற்பினிலும் கடைப்பிடித்தல் உண்டோ?
ஒரு நோக்கும் இல்லாத தமிழ்நாட்டு மக்கள்
உளங்களென்ன சல்லடையா? நல்லவற்றை விட்டு
தெருக்குப்பை தனைத்தேக்கும் செயல்கண்டு நாணித்
தேம்புதடா தமிழ்ப்பண்பு கொண்டோரின் நெஞ்சம்!
அருமருந்துப் பிள்ளைகட்குச் சூட்டுபெய ரெல்லாம்
அயல்மொழியாய் இருப்பதுவோ? தமிழ் கசத்தல் உண்டோ?

'பூங்கொடியும்' 'மலர்க்கொடியும்' பிடிக்கவில்லை உமக்கு!
'புசுப்பவல்லி' என்றால்தான் புரிந்திடுமோ சொல்வீர்?
'சேங்காலி புத்தா'னின் உறவினரா நீவிர்?
தேன்தமிழில் பெயர்வைத்தால் கேடென்ன சொல்வீர்?
'பூங்குயிலி' இனிப்பிலையோ? 'கோகில'மா வேண்டும்?
'பொற்கொடி'யை விட்டெதற்குக் 'கனகவல்லி' காதல்?
தூங்கிடுவோன் தொடையினிலே கயிறொன்று திரிக்கத்
தூங்காது திரிகின்ற நரிக்கூட்டம் உண்டே!

'குழலி' என அழைக்கையிலே நாவெல்லாம் இனிக்கும்!
குழறுமொழி 'கேசவாம்பாள்' என்றழைத்தல் நன்றோ?
அழகுதமிழ் மொழியாலே 'மகிழ்நன்' என அழைப்பீர்!
'ஆனந்தன்' என்பதிலே அழகென்ன சொல்வீர்?
விழியழகைக் கொண்டவளைக் 'கயற்கண்ணி' என்றால்
வேம்பாமோ? 'மீனாட்சி' என்றழைத்தல் நன்றோ?
'எழிலி'யென அழைக்கையிலே எழிலுண்டு மொழியில்!
எதற்காக 'சௌந்தர'மென் றழைக்கின்றீர் நீவிர்?

சிறுதுளிதான் பெருவெள்ளம்! அணுத்திரள்தான் உலகம்
சிற்றோடைத் தண்ணீர்தான் ஆழ்கடலின் புனலாம்!
சுறுசுறுப்பாய்த் தமிழகத்தின் துறைதோறும் நீவிர்
சிறிதென்றே எண்ணாது சீர்திருத்தஞ் செய்வீர்!
பொறிநெருப்புச் சிறிதெனினும் கூரையிலே வைத்தால்
பொசுங்காதோ? உம் வீடு? தமிழ்வீட்டின் மீதில்
அறிவிலிகாள்! வடமொழியாம் பொறிநெருப்பை வைத்தே
ஆர்த்தெழுந்து கொளுத்துகையில் புலம்புவது நன்றோ?

மனைகட்குச் சூட்டுபெயர் தமிழினிலே வேண்டும்!
மண்டையிலே களிமண்ணைக் கொண்டிருக்கும் மாந்தர்
நினைக்காது 'லக்மி மகால்' என்றுபெயர் வைப்பர்!
நினைத்திருந்தால் தெரிந்திருக்கும் 'திருமகளின் இல்லம்!'
முனைப்பாக ஆங்கிலத்தில் 'கிரேஃச் காட்டேச்' என்று
முகப்பினிலே பெயரெழுதிப் பெருமை கொளும் தமிழா!
இனியேனும் 'அருளக' மென் றழகான தமிழில்
இல்லத்தின் முகப்பினிலே பெயரெழுதி வைப்பாய்!

நகரத்தின் விரிவாலே புதுநகர்கள் தோன்றின்
நாவினிக்கத் தமிழினிலே பெயர்வைக்க வேண்டும்!
அகமகிழ 'அழகுநகர்' என்ற பெயர் விட்டே
ஆங்கிலத்தில் 'ஃபேர் லேண்' டென் றழைப்பதுவும் நன்றோ ?
மிகுசெல்வர் பெருமனைகள் வான் தொட்டு நிற்கும்
மேலோங்கு புதுநகரை 'சொர்ணபுரி' என்றால்
தகுமோ சொல்? 'பொன்னகரம்' என்றுரைத்தால் என்ன?
தமிழா! நீ தமிழ் மறந்தால் தாழ்ந்திடுதல் உண்மை!

தமிழக விடுதலை இயக்கம்!

"தமிழக விடுதலை இயக்கம்" ஒன்றை விரைவில் தொடங்குவதாக நாம் முன்பே அறிவித்தது தென்மொழி அன்பர்களுக்கு நினைவிருக்கலாம். அவ்வாறு தோற்ற விருக்கும் அவ்வியக்கத்தின் அமைப்பு மிகவும் கட்டுப்பாடாகவும் செப்பமாகவும் இருத்தல் இன்றியமையாதது. இனி, இயக்க அமைப்பைவிட அதில் உறுப்பினராக இருக்க வேண்டியவர்கள் மிகவும் செப்பமும், உறுதியும், வினையாண்மையும் கொண்டு, எத்தகைய முடிவுக்கும் கட்டுப்பட்டவர்களாகவும் இருத்தல் வேண்டு மன்றோ? எனவே தோற்றப் பெறும் அவ்விடுதலை இயக்கத்தில் உறுப்பினராக விரும்புவார் தம்தம் கல்வி, தொழில், குடும்பச் சூழல், அகவை, ஈடுபாட்டு அளவு முதலியனவற்றைத் தெளிவாக, பெருஞ்சித்திரன், தென்மொழி கடலூர்-1 என்ற முகவரிக்கு முடப்பெற்ற பதிவஞ்சலில் விடுக்க வேண்டுகின்றேன். பிற விளக்கங்கள் அவ்வப்பொழுது தென்மொழியில் வரும்.

–பெருஞ்சித்திரன்.

கேள்போல் பகை.

—தமிழவேள்—

பகையில் இரண்டு வகையுண்டு. ஒன்று முன்னால் வந்து தாக்குகின்ற பகை. இன்னொன்று பின்னால் இருந்து தாக்குகின்ற பகை. முன்னால் வந்து தாக்குகின்ற பகை நேர்மையான பகை. பின்னால் இருந்து தாக்குகின்ற பகை இரண்டகமான பகை. முன்னது வெளிப் பகை. பின்னது உட்பகை. வெளிப்பகையைவிட உட்பகைக்குத்தான் மிகுதியாக அஞ்சவேண்டும். அடுத்திருந்து குடியைக் கெடுக்கின்ற பகை அதுதான். கூடிக் குலவியிருந்தே குழியைப் பறிக்கின்ற பகை அதுதான். மிகச் சிறிதாக இருந்தாலும் மிகப் பெரிய அழிவைச் செய்கின்ற பகை அதுதான்.

வெளியே உறவாக நட்பாக நடிப்பார்கள். உள்ளே கரவும் வஞ்சனையும் கொண்டு செயல்படுவார்கள். முகத்தில் நகையைக் காட்டி இனிக்க இனிக்கப் பேசுவார்கள். அகத்தில் பகையைத் தேக்கி அழிவு வேலைகளில் ஈடுபடுவார்கள். இனத்தால் ஒன்றானவர் போல் தோன்றுவார்கள். மனத்தால் வேறுபட்ட வினைகளையே செய்வார்கள். 'அகத்தே கறுத்துப் புறத்தே வெளுத்திருக்கும்' அத்தகையவர்களைத் தான் திருவள்ளுவர் ''இனம் போன்று இனமல்லார்'' என்றும் ''கேள் போல் பகைவர்'' என்றும் சுட்டிக் காட்டுகிறார். ''வாள் போல் வெளிப்படையாகத் தாக்க வரும் பகைவர்க்கு அஞ்ச வேண்டுவதில்லை. ஆனால் கேள் போல் (உறவினர் போல்-இனத்தவர் போல்) இருந்து கேடு செய்யும் பகைவர்க்கு அஞ்சவேண்டும் என்கிறார் அவர்.

வாள் போல் பகைவரை அஞ்சற்க; அஞ்சுக
கேள் போல் பகைவர் தொடர்பு

—குறள் 882

தனிப்பட்ட மக்களின் வாழ்க்கைக்கு ஊறு விளைக்கும் ''கேள் போல் பகைவர்'' களைப் போன்றே ஒரு நாட்டுக்கும் மொழிக்கும் கேடு பயக்கும் உட்பகையும் உண்டு. தமிழ் மொழிக்கும் தமிழ் நாட்டுக்கும் அப்படி ஓர் உட்பகை நெடுநாட்களாக இருந்து வருகிறது. தமிழுக்கு நேர்ந்த கேடுகள் எல்லாம்—தீங்குகள் எல்லாம்-அந்த உட்பகையால் விளைந்தவைதாம். இம்மண்ணிலேயே பிறந்து, தமிழையே தாய் மொழியாகக் கொண்டு வளர்ந்து, தமிழால் பொருள் ஈட்டி, தமிழால் வயிறு வளர்த்து, தமிழாலேயே எல்லாச் சிறப்புகளையும் பெற்று வாழ்ந்தாலும், தமிழையும், தமிழ் நெறியையும் பாராட்டாமல்

பிறமொழியையும் பிற நெறியையுமே பாராட்டி அந்தப் பிறமொழிக்கே தமிழ் நாட்டில் தலைமையிடம் பெற்றுத்தர அல்லும் பகலும் அயராது உழைத்து வரும் சிலர் தமிழ் நாட்டில் இருந்து வருகிறார்கள். மேற் போக்காகப் பார்த்தால் அவர்களுடைய செயல்கள் தமிழுக்குப் பெருமை தேடுவன போல் இருக்கும். ஆனால் அவர்தம் செயல்களின் விளை வெல்லாம் தமிழுக்குச் சிறுமை செய்வதாக இருக்கும்; தமிழைக் கொல்வதாக இருக்கும்; தமிழனைத் தாழ்த்துவதாக இருக்கும்.

பரிமேலழகர் திருக்குறளுக்கு உரை எழுதினார் என்றால் அவர் தமிழுக்குத் தொண்டு செய்யும் எண்ணத்தோடு எழுதவில்லை. மனு முதலிய வட மொழி நூல்களைப் பின்பற்றித் திருவள்ளுவர் திருக் குறளைச் செய்தார் என்னும் முற்றிலும் பிழைபட்ட கருத்தைப் பரப்பு வதற்காகவே எழுதினார் என்பது அவர்தம் உரையிலிருந்தே நன்கு புலனாகிறது. இல்லையென்றால் "அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாம்" என்று அவர் எழுதி யிருப்பாரா? அவரைப்பற்றிக் காலஞ் சென்ற பேராசிரியர் இரா. பி. சேது அவர்களே சொல்வது இது: "உரையாசிரியர் சில இடங்களில் தமது கொள்கையை வலிந்து நூலிற் செறித்துக் குறட்பாக்களுக்கு வலிந்தும் பொருள் கொண்டுள்ளார்; சில இடங்களில் இலக்கண அமைதிக் கேற்ப இலக்கியத்தைச் சிதைத்து இயற்கைக்கு மாறான பொருள் சொல்கின்றார். இன்னும் பல இடங்களில் தமிழ் நூல் வழக்குகளை வடமொழிக் கென்று வலிந்து வரைகின்றார்; ஆதலின் பரிமேலழகர் உரையை எல்லா இடங்களிலும் ஆணையாகக் கொள்ளுதல் ஏற்புடைத்தன்று; ஆசிரியர் கருத்தையும் உரையாசிரியர் கருத்தையும் ஒப்பு நோக்கி ஆசிரியர் கருத்தோடு இணங்கிச் செல்கின்ற இடத்தில் உரையாசிரியர் கருத்தை ஒப்புக்கொண்டு அவை வேறுபடும் இடங் களில்ஆசிரியர் கருத்தைத் தமது அறிவாற் கண்டு கொள்ளுதல் நடு நிலையில் நின்று ஆராயும் அறிஞர் கடமையாம்."

தொல்காப்பியத்துக்கும், பத்துப்பாட்டிற்கும், கலித்தொகைக்கும் சீவக சிந்தாமணிக்கும் உரை எழுதிய நச்சினார்க்கினியர் என்பவரும் பரிமேலழகர் வழி வந்தவரே. "பாண்டி வள நாட்டுள்ள மதுராபுரியில் பிராமணவருணத்திற் பாரத்துவாச கோத்திரத்திற் பிறந்தவர்" என்று டாக்டர். உ. வே. சாமிநாதர் அவர்களால்" விளக்கப்படும், "உச்சிமேல் புலவர் கொள்" நச்சினார்க்கினியர்க்குத் தனித்தமிழ்த் தந்தை மறை மலையடிகளார் தரும் பாராட்டென்னவென்றால், "இவர்போல் இங்ஙனம்

உரைக்குழப்பம் செய்வார் பிறரை வேறு யாண்டும் கண்டிலேம்'' என்பதாகும். மறைமலையடிகள் மேலும் விளக்கமாகவே கூறுகிறார்: ''செய்யுளின் இடையற்று ஒழுகும் பொருள் ஒழுக்கம் அறிந்து உரை எழுதாராய் ஓர் அடியில் ஒரு சொல்லையும் தொலைவிற்கிடக்கும் வேறோர் அடியில் வேறொரு சொல்லையும் தமக்குத் தோன்றியவா றெல்லாம் எடுத்திணைத்துத் தாமோர் உரை உரைக்கின்றார் நச்சினார்க்கினியர். அவ்வாறு இணங்கா உரை எழுதியதுதான் என்னையோவெனின் வட மொழியில் இங்ஙனமே செய்யுட்களை அலைத்துப் பாட்டு ஒரு பக்கமும் உரை ஒரு பக்கமும் ஆக இணங்கா உரை எழுதிய சங்கராசாரியர் காலத்திற்குப் பின்னேயிருந்தே நச்சினார்க்கினியர் வடமொழியில் அவர் எழுதிய உரைகளைப் பன்முறை பார்த்து அவைபோல் தமிழி லும் உரை வகுக்கப் புகுந்து தமிழ்ச் செய்யுள் வழக்கின் வரம்பழித்து விட்டார் என்றுணர்க!''

வடமொழிக் கலப்பால் தமிழ்மொழிக்கு ஏற்பட்ட இன்னல்கள் அளப்பரியன என்பது கண்கூடு. ஒரு காலத்தில் இந்தியத் துணைக் கண்டம் முழுவதுமே அரசோச்சி வந்த தமிழன்னையின் ஆட்சி இன்று நாட்டின் ஒரு மூலையில் மட்டுமே என்றாகி விட்டது வட மொழிக் கலப்பால் தானே? ஒரே மொழியாக இருந்த செந்தமிழ், கன்னடம் என்றும், தெலுங்கு என்றும், மலையாளம் என்றும், துளு என்றும் பலவாகப் பிரிந்தது வடமொழியின் சேர்க்கையால் தானே? தமிழ் நாட்டில் தமிழனால் கட்டப்பட்டுத் தமிழனின் பொருள்கொண்டு குட முழுக்கும் வழிபாடும் விழாவும் நடத்தப் படுகின்ற கோயில்களில் எல்லாம் தமிழ் வழங்காமல் வடமொழி வழங்கி வரும் நிலை ஏற்பட்டிருப்பது தமிழ் மண்ணில் வடமொழிக்கு இடம் அளித்ததால் தானே? தமிழர் தம் மணவிழா, மனைபுகுவிழா முதல் நீத்தார் நினைவு நாள் வரை எல்லா நிகழ்ச்சிகளிலும் இன்று தமிழுக்கு இட மில்லாமல் போனது வடமொழியை இங்கே நுழைய விட்டதால் தானே? அத்தகைய வடமொழிச் சொற்கள், ''தமிழின் அழகை, ஆற்றலை, இனிமையை, ஏற்றத்தைக் கெடுத்து விடுகின்றன. அதுவும் தமிழ்ச்சொற்கள் இருக்கும்பொழுது பிறமொழிச் சொற்களை எடுத்தாள்வது தமிழைக் கொலை செய்வதாகும்'' என்பார் மறைமலை யடிகள். ஆனால் தமிழுக்குப் பெருந் தொண்டாற்றியதாகக் கூறப் படும் டாக்டர். உ. வே. சாமிநாதர் "தமிழுக்கு வடமொழிக் கலப்பு வேண்டும் என்கிறார். "வடசொற்கள் தமிழை அழகுபடுத்துகின் றன'' என்கிறார்.

ஏட்டுச் சுவடிகளாக இருந்த பழந்தமிழ் நூல்கள் பலவற்றை சாமிநாதர் அவர்களுக்கு முன்னமே ஆறுமுக நாவலர் அவர்களும் சி. வை. தாமோதரம் அவர்களும் அச்சேற்றிப் பதிப்பித்திருக்கிறார்கள். தமிழ்ப்பற்றுக் கொண்ட தமிழர்களே தமிழ்ச் சுவடிகளையெல்லாம் பதிப்பித்திருப்பின் இன்று நாம் காண்கின்ற எத்தனையோ இடைச் செருகல்களுக்கும் பொருந்தாக் கருத்துகளுக்கும் இடமில்லாமல் போயிருக்கும். தமிழ்ப் பற்று அற்றவர்களும், தமிழினும் வடமொழியே சிறந்ததென்னும் உட்கருத்துடையவர்களும் பழந்தமிழ் நூல்களை உள்ளது உள்ளவாறே எப்படிப் பதிப்பித்திருக்க முடியும்? தங்கள் உட்கிடக்கையை இரண்டோர் அடிகளாக எழுதிப் பாட்டின் இடையே எப்படிப் புகுத்தாமல் இருந்திருக்க முடியும்? அப்படிப் புகுத்தப் பட்டிருக்கிறது என்பதற்கு உள்ளங்கை நெல்லிக்கனியென விளங்கும் ஓர் எடுத்துக்காட்டு, பதிற்றுப்பத்தில் இருக்கிறது.

பதிற்றுப்பத்து ஏழாம்பத்து செல்வக்கடுங்கோ வாழியாதனைக் கபிலர் பாடியதாக உள்ளது. அதில் மூன்றும் பாடலின் முதல் அடியாக இருப்பது கபிலர் எழுதியதாக இருக்க முடியாது என்பதை அப்பாடலைப் படிப்போர் எளிதில் தெரிந்து கொள்ளலாம்.

"பார்ப்பார்க் கல்லது பணிபறி யலையே!
பணியா உள்ளமொடு அணிவரக் கெழீஇ
நட்டோர்க் கல்லது கண்ணஞ்சலையே!
வணங்குசிலை பொருத நின் மணங்கம ழகலம்
மகளிர்க் கல்லது மலர்பறி யலையே!
நிலந்திறம் பெயரும் காலையாயினும்
கிளர்ந்த சொல் நீ பொய்ப்பறி யலையே!"

என்று சொல்லுகின்ற அந்தப் பாட்டில், "நண்பர்களுக்கு அல்லது நீ கண்ணஞ்ச மாட்டாய், மகளிர்க் கல்லது நின் மார்பை மலர்விக்க மாட்டாய், நிலம் புடைபெயரும் நேரமாயினும் நீ சொன்ன சொல்லைப் பொய்யாக்க மாட்டாய்" என்ற கருத்துகள் இரண்டிரண் டிடங்களில் அழகுறச் சொல்லப்பட்டிருக்க, பார்ப்பார்க்குத் தவிர மற்றவர்க்குப் பணியமாட்டாயென்ற கருத்துமட்டும் ஓரடியில் சொல்லப்படுவானேன்? கபிலரே அதனை எழுதியிருந்தால் ஓரடியிலா எழுதியிருப்பார்? ஏன் பார்ப்பார்க்கு மட்டும் பணிய வேண்டும், மற்றவர்க்குப் பணியக் கூடாது? அதற்கான காரணத்தை அவர் ஏன் சொல்ல வில்லை?

எல்லாரிடத்தும் பணிவு வேண்டும் என்பதுதானே தமிழ் நெறி ? அந்த நெறிக்குப் புறம்பாகப் பார்ப்பார்க்கு மட்டுமே பணிய வேண்டும் என்று பொய்யா நாவிற் கபிலரா புகன்றிருப்பார்?என்றெல்லாம் எண்ணிப் பார்த்தால் அப்பாட்டில் முதலடியாக இருப்பது யாரோ (ஆரியப் பார்ப்பார்) ஒருவர் எழுதிச் சேர்த்ததுதான் என்பது தெளிவாகத் தெரியும்.

வ. வெ. சுப்பிரமணியர் என்பவர் பாரதியார் காலத்தில் வாழ்ந்த ஒரு "தேசப்பற்றுளர்". அவர் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டிருக்கிறார். "ஆ! தமிழுக்கு அவர் செய்துள்ள தொண்டுதான் என்னே! திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்ததன் மூலம் அதனை உலகறியச் செய்த பெருமை அவரையல்லவா சாரும்! தமிழன்னைக்கு அவரைப் போன்ற நன்மக்கள்தாமே வேண்டும்?" என்றெல்லாம் அந்நூலைப் படிக்காதவர்கள் பாராட்டிப் பேசலாம்; படித்தவர்களோ தமிழுக்கு இதைவிடத் தீங்கு வேறு என்ன வேண்டும்?" என்று மனம் புழுங்கத்தான் நேரும்.

"அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்"

என்ற குறட்பாவை அவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கும் வகையைப் பாருங்கள்.

"Brahmins are also to be looked upon as men of renunciation far they have Compassion on all life!"

"அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல்"

என்னும் குறட்பாவின் ஆங்கில மொழியாக்கத்தையும் பாருங்கள்:

"The Scepture of the prince is the mainstay of the science of the Brahmins and of the righteousness also!"

இத்தகைய மொழி பெயர்ப்பால் தமிழர்தம் உயர் நெறியையா உலகத்தவர் தெரிந்து கொள்வர்? திருவள்ளுவர் சொன்னதை அப்படியே மாற்றியல்லவா சொல்கிறார் மொழி பெயர்ப்பாளர்!

அவர் திருக்குறளைத் தாம் விரும்பியபடி மொழி பெயர்த்ததோடு மட்டுமா நின்றார்? அந்த மொழிபெயர்ப்பு நூலுக்கு ஆங்கிலத்தில் ஒரு முன்னுரையும் எழுதித் தம் நெஞ்சம் எத்தகையது என்பதைத் தெரிவித்திருக்கிறார்! திருவள்ளுவரை அவர்- 'வானளாவப்' புகழ்வது போல் புகழ்ந்து 'பறையன்'—என்றும், 'பற நெசவாளி' என்றும் இழித்துக் கூறுகிறார். "பீசுமரோ அல்லது கவடில்யரோ, காமந்தகரோ அல்லது இராமதாசரோ, விட்டுணுசர்மனோ அல்லது மாக்கியவெல்லியோ அல்லது கன்பூசியசோ ஒரு நாட்டு அரசியல் முறைக்கு இந்தப் 'பறநெசவாளி' கூறியதைவிட அருமையான அறிவுரைகளைக் கூறவில்லை. காளிதாசரோ, சேக்சுபியரோ காதலர்களின் நெஞ்சம் பற்றியும் அதன் பல்வகையான மாற்றம்பற்றியும் இந்தப் 'பறநெசவாளி' யைவிட ஆழ்ந்த அறிவைப் பெற்றிருக்கவில்லை" என்கிறார்

"Bishma or Kautilya, Kamandaka or Ramadas, Vishnu Sharman or MachiaVelli or Confucius have no more subtle Councel to give on the Conduct of state and Kalidasa or Shakesphere have no deeper Knowledge of the lover's heart and its Varied moods than this "Paraiah Weaver!"

திருவள்ளுவரைப் பற்றிய வரலாறு எதுவுமே இல்லை. அவருடைய இயற்பெயர்கூடத் தெரியவில்லை. அவர் எழுதியுள்ள திருக்குறளில் தமிழ் நாட்டிலுள்ள எந்த ஓர் ஊரின் பெயரோ, மலையின் பெயரோ, ஆற்றின் பெயரோகூடக் குறிப்பிடப் படவில்லை. தமிழ் என்ற சொல்கூட அதில் இல்லை. உழவைப் பற்றி ஓர் அதிகாரமே வைத்திருக்கும் அவர், வணிகர்களின் துலாக்கோல் பற்றியும் பொற்கொல்லர்களின் 'கட்டளைக்கல்' பற்றியும் குறிப்பிடும் அவர் நெய்தற்றொழில் பற்றியோ நெய்தற்றொழில் தொடர்பான எந்த ஒரு செய்தியையோ மறைமுகமாகவும் சொல்லவில்லை. அப்படியிருக்கத் திருவள்ளுவரை ஒரு நெசவாளி என்றும் பறையர் என்றும் ஆங்கிலத்தில் எழுதி வெளியிட வேண்டிய தேவை என்ன? திருவள்ளுவரைப்பற்றிய உண்மை வரலாறு தெரிந்திலது என்ற உண்மையை ஏன் சொல்லியிருக்கக் கூடாது? சொல்வதற்கு மனம் இல்லாத குறைதானே?

அந்த முன்னுரையிலேயே வ. வெ. சு. (அய்யர்) அவர்கள் மேலும் சொல்கிறர்: ''பொருட்பால் என்ற தலைப்பு தரப்பட்டிருப்பது திருவள்ளுவருடைய புதிய கண்டுபிடிப்பன்று. ஏற்கனவே கவுடில்யர் அரசியலைப்பற்றி இறவாப் புகழுடைய தமது நூலை எழுதி அதற்கு ''அர்த்த சாத்திரம்'', அதாவது பொருளைப்பற்றிய நூல் என்று பெயரிட்டிருக்கிறர். ஆனால் அவருங்கூட அதனைக் கண்டு பிடித்தவராகமாட்டார். ஏனென்றால் அது மகா பாரதத்தைப் போல் அவ்வளவு பழமையானது''

„The giving the title of Wealth is no invention of Thiruvalluvar. Already Kautilya had written his immortal treatise on polities and Called it ''Artha Sastra'' or treatise on Wealth; But even he is not the invention for it is as old as Maha baratha''

பொருள் என்னுந் தலைப்பு தமிழுக்கே உரிய ஒன்று. அது வடமொழியிலிருந்து தமிழுக்கு வந்தது அன்று. தமிழிலிருந்து வட மொழிக்குச் சென்றது. உலகத்திலுள்ள எந்த மொழி இலக்கணத்தை எடுத்துப் பார்த்தாலும் அஃது எழுத்து, சொல் என்ற இரண்டைப் பற்றி மட்டுமே பேசுவதையறியலாம். தமிழ் இலக்கணம் ஒன்று தான் எழுத்து. சொல் என்ற இரண்டினேடு பொருள் என்னும் வாழ்க்கை நெறிமுறைகளைப் பற்றியும் பேசுகிறது. இன்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத்திலேயே எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் பொருளதி காரம் என்ற மூன்று பகுதிகள் உள்ளன. அகப்பொருள் என்றும். புறப்பொருள் என்றும் வாழ்க்கையைப் பிரித்துச் சொல்வதும் நம் தமிழ் மரபுதான். சாணக்கியரின் 'அர்த்த சாத்திரம்' அரசியலைப் பற்றி மட்டுமே சொல்வது; அரசியலில் எத்தகைய வஞ்சகத்தை யும், கரவையும், ஏமாற்று வேலையையும் செய்யலாம் என்று கூறு வது. ஆனல் திருக்குறளிலுள்ள பொருட்பாலோ அரசியலைப்பற்றி மட்டும் கூறுவதன்று. கல்வி, கேள்வி, அறிவுடைமை, கண்ணேட்டம் ஊக்கமுடைமை, பொருள் செயல்வகை, நட்பு, நட்பாராய்தல், பழமை, வரைவின் மகளிர், கள்ளுண்ணுமை, சூது, மருந்து, குடிமை, மானம், பெருமை, சான்ருண்மை, பண்புடைமை, உழவு, நல்குரவு, இரவு முத லான பலவற்றைப் பற்றியும் கூறுவது. நேர்மையும் அறமும்

அரசியலுக்குத் தேவை என்று பகர்வது. எனவே அர்த்த சாத்திரம் என்பது திருக்குறளோடு ஒப்பிடுவதற்கே தகுதியற்றதாகும்.

அறம், பொருள், இன்பம் என்னும் மூவகைப் பாகுபாடும் தனித் தமிழ்க் கொள்கையே யாகும்.

"இன்பமும் பொருளும் அறனும் என்றுங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்..."

என்பது தொல்காப்பியம்.

"சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்
அறத்து வழிப்படூஉம் தோற்றம் போல"

என்பதும்,

"அறனும் பொருளும் இன்பமும் மூன்றும்
ஆற்றும் பெரும!"

என்பதும் முறையே கோவூர் கிழாரும், உறையூர் முதுகண்ணன் சாத்தனும் பாடிய புறநானூற்றுப் பாடல்கள் (புறம் 31, 28)

இன்பம் என்பது அகவாழ்வு; பொருள் என்பது புறவாழ்வு. அறம் என்பது அகவாழ்விலும் புறவாழ்விலும் கலந்துநின்று வாழ்வை உயர்த்துவது. 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்தல்' என்பது இந்த மூன்றும் பொருந்திய வாழ்வுதான். அவ்வாறு வாழ்ந்து மெய்யுணர்வு பெற்று அவாவிலிருந்து விடுபடுவதே – விருப்பு வெறுப்புகளினின்று விடுபடுவதே – வீடு என்பது. எனவே வீட்டைப்பற்றித் தனியாகச் சொல்வதற்கு ஒன்றுமில்லை. வீடு என்பது அறத்திலேயே அடங்குவது. அதனால்தான் திருவள்ளுவர் அறம், பொருள், இன்பத்தை மட்டுமே சொன்னார். இதனை உணரும் மனப்பக்குவம் அற்ற வ. வே. சு. (அய்யர்) தம் முன்னுரையில் குறிப்பிடுகிறார்: "திருவள்ளுவர் நான்காவதான வீடுபேற்றைப் பற்றிக் கூறவில்லை; அவர் அவ்வாறு கூறாமல் விட்டதற்குக் காரணம் 'பிராமணர் என்பவரைத் தவிர வேறு எவரும் மெய்யுணர்வைப் பற்றிக் கூறும் ஆசிரியராக இருக்கக் கூடாது என்ற வைதீக நெறிக்குத் தம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டதேயாகும்' என்று வைதீக மக்கள் கூறுகிறார்கள்"

"Thiru valluvar does not treat the Fourth objective (Heavenly Bliss – வீடு) and orthodox people say that

he has Submitted himself to the Orthodox rule that none but a Brahmin should be a teacher of Spiritual truth."

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப் பொவ்வா, செய் தொழில் வேற்றுமையான்" என்றும், "அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான்" என்றும் பழமை நெறியைச் சாடுகின்ற திருவள்ளுவரா பழமை நெறிக்குத் தலை தாழ்த்தியிருப்பார்? என்று எண்ணிப் பார்க்க வேண்டும். எண்ணிப் பார்த்தால் மொழிபெயர்ப்பாளரின் உள்ளக் கிடக்கை தெற்றென விளங்கும்.

தொல்காப்பியமும் திருக்குறளும்தாம் தமிழுக்கு இரு கண்க ளெனத் திகழ்பவை. அந்த இரு கண்களையும் பறித்துவிட வேண்டு மென்பது தமிழ்ப் பகைவர்களின் உட்கிடக்கையாக இருக்கிறது. அதனாலேயே அவர்கள் தொல்காப்பியமும் திருக்குறளும் தமிழர் களிடையே பரவ விடாமல் தடுக்கத் தம்மால் ஆனவற்றை யெல்லாம் செய்து வருகிறார்கள். அதே நேரத்தில் வால்மீகி இராமாயணத்துக்கும் பகவத்கீதைக்கும் அவர்கள் தருகின்ற விளம்பரமும் உயர்வும் ஓர் எல்லைக் குட்பட்டதாகவே தெரியவில்லை.

"மார்கழி நோன்பு நோற்கின்ற பொழுது திருக்குறளைக் கூடப் படிக்கமாட்டோம்" என்ற கருத்துப்பட ஆண்டாள் தம் திருப் பாவையில், "தீக்குறளைச் சென்று ஓதோம்," என்று பாடியிருக்கிறா ரென்று இரண்டு மூன்று ஆண்டுகளுக்குமுன் பார்ப்பனப் பண்டாரம் ஒருவர் திருவாய் மலர்ந்தருளியதைப் பார்த்தோம். தமிழர்கள் திருக்குறளைப் படிக்கக் கூடாது என்பது அந்தப் பண்டாரத்தின் எண்ணம். அந்த எண்ணத்தையே ஆண்டாள் மீது ஏற்றிச் சொன்னார். ஆனால் உண்மையில் ஆண்டாள் சொல்லியது என்ன? தீக்குறளை சென்று ஓதோம் என்றால் திருக்குறளைச் சென்று படிக்கமாட்டோம் என்றா பொருள்? திருக்குறளை இருந்தல்லவா படிக்க வேண்டும்? சென்றா படிப்பது? எங்கே சென்று படிப்பது? தீக்குறளை என்றால் தீய குறளை என்று பொருள். குறளை என்றால் கோள் சொல்லுதல்–புறங்கூறுதல்–என்று பொருள். சொல்லில் தோன்றும் குற்றங்கள் நான்கு என்றும், அவை பொய், குறளை, கடுஞ்சொல், பயனில்சொல் என்றும் மணிமேகலை ஆசிரியர் சீத்தலைச் சாத்தனார் குறிப்பிடுகிறார்.

''பொய்யே குறளை கடுஞ்சொல் பயனில் சொல்லெனச் சொல்லில் தோன்றுவ நான்கும்'' என்று புறஞ்சொல்லைக் குறிக்கக் குறளை என்னும் சொல்லை எடுத்தாண்டிருக்கிறார். ஒருவர்க்குப்பின்னால் சென்று புறம் சொல்ல மாட்டோம் என்ற கருத்தைத்தான் ''தீக்குறளை சென்று ஓதோம்'' என்ற அடியில் ஆண்டாள் குறிப்பிடுகிறார். உண்மை இவ்வாறிருக்க அந்தப் பண்டாரம் தீக்குறளை' என்பதைத் திருக்குறள் என்று கூறக் காரணம் என்ன? தமிழின்பால் கொண்டுள்ள உட்பகையன்றி வேறென்ன?

அண்மையில் ஒரு திங்கள் இதழில் வெளியான கட்டுரை ஒன்றில் ஓர் இளைஞர் தமது முற்போக்குக் கருத்தையும் தமக்குத் தமிழின்பால் உள்ள தணியா ஆர்வத்தையும் எழுத்தில் வடித்துக் காட்டியிருந்தார்! தமிழ் இளைஞர்களிடம் இன்று தொல்காப்பியமும் திருக்குறளும் மேலாண்மை செலுத்துகின்றனவாம்! அந்த மேலாண்மை தமிழ் இளைஞர்களின் முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கிறதாம்; எனவே தமிழ் இளைஞர்களின் முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ள தொல்காப்பியத்தையும் திருக்குறளையும் கூட ஒழித்துக் கட்டத் தயங்கக் கூடாது என்று தம் உள்ளக் கொதிப்பை வெளியிட்டிருந்தார். தொல்காப்பியமும் திருக்குறளும் இன்றைய இளைஞர்களிடம் மேலாண்மையா செலுத்துகின்றன? அப்படி ஒருநிலை இருந்தால் தமிழும் தமிழ்நாடும் இப்படியா இருக்கும்? இளைஞர்களின் முன்னேத்திற்குத் தொல்காப்பியமும் திருக்குறளும் தடைகளாகவா உள்ளன? எந்தவகையில் அவை தடையாக உள்ளன? எல்லாம் அந்தக் கட்டுரையாளரின் கற்பனையும் அச்சமும் தான்! தமிழ் எங்கே வளர்ந்து விடுமோ, அதனால் தமிழ்நாட்டில் மேலாண்மை செலுத்தி வரும் சமற்கிருதமொழி எங்கே முற்றிலுமா புதைக்கப்பட்டு விடுமோ என்ற எண்ணமும் கவலையுமே அந்தக் கட்டுரையாளரைப் பிடித்து ஆட்டியிருக்கின்றன. அதனாலேயே அவர் அப்படி ஒரு கட்டுரையை எழுதியிருக்கிறார்.

இந்தப் பகைதான் கேள்போல்பகை என்பது. இந்தப்பகையைத் தான் இன்று தமிழ்நாட்டில் உலவும் நாளிதழ், கிழமை இதழ்கள் பலவும் கக்கி வருகின்றன! இந்தப்பகையால்தான் தமிழ்நாட்டில் தமிழ்ப்பற்று குறைந்து இருக்கிறது. இந்தக் குறையை நிறையாக்கு வதற்கு மிகுந்த விழிப்புணர்ச்சி தேவை. தனித்தமிழ் ஆர்வம் கொண்டோர் அனைவரும்-கேள் போல்பகை ஒன்று தமிழுக்கு இருந்து வருவதை நன்கு உணர்ந்து செயற்பட்டால்தான் தமிழ் வாழும்.



அச்சர்கு நூலெல்லாம் நூலாமோ? ஆங்குசிலர்
மெச்சியுரை செய்வதனுல் மேலாமோ? – முச்சில்
புடைத்துலையில் இட்ட புதுமணலைச் சோருய்ப்
படைத்துவிட லாமோ பசிக்கு !

இனிக்கும் நினைவுகள் !

(பாடல்கள்)

எழுதியவர் : எழில் முதல்வன். கற்பனை நூற் பதிப்பகம்,
11. கிரேசு கார்டன் 2 - ஆம் தெரு, சென்னை - 13.

விலை உருபா: இரண்டு.

புதுமை என்ற பெயரால் தற்காலத் தமிழகத்தில் பாத்துறையில் விளையாடிக் கொண்டிருக்கும் கோமாளிக் கூட்டம் ஒன்றின் பாடல்களின் தன்மைக்கு எடுத்துக் காட்டாக இந் நூலைக் கூறலாம். காலத்தைக் கடந்து நிற்கும் தகுதி வாய்ந்த பாடல் ஒன்று தானும் இந்நூலில் இல்லை. "பதர்க் கவிகாள்" என்ற பாடல் மட்டும் சற்றே கவனத்தை ஈர்க்கின்றது. இந்நூல் முழுமைக்கும் பொருத்தமானதொரு மதிப்புரையாக அப்பாடல் அமைந்திருப்பதுதான் வியப்பாகும்! ஆசிரியர் அப் பாடலில் எவை எவற்றைக் கடிந்து சாடுகின்ருரோ அவை அத்தனையும் அவர்தம் பாடல்களில் உள! எவை எவை நல்லபாட்டுக்கு வேண்டுமென்கின்ருரோ அவை இந்நூலில்

(முன்பக்கத் தொடர்ச்சி)

அதே நேரத்தில் தமிழுக்குப் பகையாகத் தங்களைக் கருதிக் கொண்டிருப்பவர்களும் அந்தப் பகைமையை அறவே விட்டுவிட்டுத் தமிழர்களோடு தமிழர்களாகக் கலந்துவிட வேண்டும். தமிழர்கள் எல்லாரும் தமிழை ஒருவகையாகப் பேசத், தாங்கள் மட்டும் அதனை வேறு வகையாகப் பேசுவதையும் எழுதுவதையும் விட்டொழிக்க வேண்டும். தங்கள் தாய் மொழியும் தந்தை மொழியும் தமிழே என்று மனத்தூய்மையோடு நினைக்க வேண்டும். தமிழின்பால் கொண்ட பகையுணர்வைக் களைந்து எறிய வேண்டும். அவ்வாறு திருந்துவதுதான் அவர்களுக்கும் நல்லது; நாட்டுக்கும் நல்லது.

ஒரு பாட்டில் தானும் இல்லை. (இவர் கூறும் புது உவமை ஒன்றைத் தவிர.) பாட்டென்றால் புது உவமை வேண்டும் என்கின்றார் ஆசிரியர்; அதற்கொப்பவே பல புது உவமைகளை அவர் கையாண்டிருப்பது உண்மையே! ஆயினும் 'புதுமை' என்பதனால் மட்டும் ஒன்றுக்குச் சிறப்பு அமைந்து விடுவதில்லையே! 'பிசிராந்தையார் தலை', 'நூற்பா, விருத்தியுரை', 'வல்லெழுத்தைச் சார்ந்து வரும் ஆய்தம்', 'உடம்படு மெய்', 'மாயூரம், கும்பகோணம், 'சுப்ர தீபக் கவிராயன் பாட்டு' என்றெல்லாம் இவர் புனைந்துள்ள புது உவமைகள் சுவைக் குறைவுக்குக் காரணமாகின்றனவே அல்லால் பாட்டுக்குச் சிறப்புத்தருவனவாக இல்லை. மற்றும் ஒன்று: பாட்டுக்கு 'உவமை' இன்றி அமையா உறுப்பன்று. உவமையே இல்லாமற் சிறந்து நிற்கும் பாடல்கள் பல. "பூத்த வேங்கை..." என்று தொடங்கும் செந்தொடைப் பாடலை ஆசிரியர்க்கு நினைவூட்டுகின்றோம்.

இப்பாடல்களில் மிக மலிந்து கிடக்கும் குற்றியலுகரப் பிழைகளும், ஒற்று, ஓசை, கருத்து, உணர்வுப் பிழைகளும், பொருந்தாச் சொல், வழுச்சொல், வடசொற் புணர்ப்புகளும் (இவற்றை இங்கு எடுத்துக்காட்ட வேண்டியதில்லை. படிப்பார்க்கு அவை மிக வெளிப்படை.)

"சுருங்காத உழைப்பின்றி, உணர்ச்சி இன்றிச்
சொந்தச்சிந் தனையின்றி யாப்பும் இன்றிப்
பெரும்புலவர் எனக்கருதிக் கண்டோர் எல்லாம்
பிழைபுரிகின் றார்;கவிதை புனைகின் றார்கள்"

"சத்திரமா படுத்துறங்க? இலக்கியத்துச்
சந்தையிலே தகவில்லார்க் கென்ன வேலை?
கத்துவதில் இசையுண்டு! அதனால் வண்ணான்
கழுதையும் ஓர் பாடகனா?......"

என்று தாம் எடுத்துக் காட்டிய குறைகட்குத் தாமே ஆளாகின்றார் எனபதையே புலப்படுத்துகின்றன.

இழிசுவை நூல் முழுவதும் தேங்கி நிற்கின்றது. 'ஈர இரவு 'நிருவாண விழிகள்' 'தாகம்தீர்க்கும் பிறைவடிவத் தண்ணீர்', 'உப்புமது' 'கட்டிலிலே ஈரமானர்' 'எச்சில் அமுது' என்பன போலும் சொற்கள் அருவருப்பையே எழுப்புகின்றன. காதலையும் பெண்ணையும் பாடுகையில், செய்திகளைக் குறிப்பாக உணர்த்தலும் மறைமுகப்

பாணியைக் கையாள்தலும், நுணுக்கமான நயத்தினைப் புலப்படுத்த லுமே வேண்டப் படுவனவாம். 'முந்தானை (முன்றானை அன்றும்!) அந்தாதி', 'இரவுவிடுதூது', தூக்கக் கற்பனை', "நெஞ்சின் அலைகள்" போன்ற பாடல்களை எந்த நற்பெண்தான் கூச்சமின்றிப் படிக்க முடியும்? ஆசிரியர்க்கு மணமாகியிருந்தால் அவர்தம் மனைவியாரே அப்பாடல்கட்குத் தீர்ப்பு வழங்கட்டும்!

'சுப்பிரதீபர்' போன்ற இடைக்காலப் புலவர்கள் காமச்சுவை ததும்பப் பாடியுள்ளமை உண்மையே! ஆயின் அன்னார்தம் பாடல்கள் சிறந்த தமிழ்ப்பாக்கட்கு எடுத்துக்காட்டுகளல்ல! சான்றோர் அவற் றைப் போற்றவுஞ் செய்யார். மற்றும், அவர்கள் பாடியதும் மன்னர் களைமகிழ்விக்கவே. ஆனால் இன்று மக்கள் நலங்கருதிப் பாடுவதாகக் கூறிக் கொள்ளும் இப் புதுமையாளர்கள் பண்பு கெடும் முறையில் உணர்வுகளைச் சென்றவிடத்துச் செலவிடுவது எவ்வகையிலும் பொருத்தம் ஆகாது. உள்ளத்தில் மறைந்து கிடக்கும் புலனுணர்வு களையும், இழிசுவை நாட்டத்தையும் தணித்துக் கொள்ளும் கருவி யாகவே இவர்கள் பாடலைப் பயன்படுத்துகின்றனர் எனலாம். கழிப்பறைச் சுவர்களில் ஆண்பெண் உறவு பற்றிய படங்களையும், சொற்களையும், கற்பனைகளையும் எழுதித் தங்கள் பாலியல் வேட்கை களைத் தணித்துக்கொள்ளும் கல்லா மாக்கட்கும் இத்தகைய பாடல்களை எழுதுவார்க்கும் எந்த வேறுபாடும் இருப்பதாக் நமக்குத் தெரிய வில்லை. இப்பாடல்கள் இயல்பான காதலுணர்வையோ, காதலுணர் வின் அழுத்தத்தையோ வெளிப்படுத்தினும் ஒருவாறு ஒப்புக் கொள்ளலாம். அவையோ, பருவ வேட்கையினையும் பலபெண்டிர் நாட்டத்தையுமே வெளிப்படுத்துகின்றன. குறிப்பாக ''முந்தானை அந்தாதி'', பாதமலர்கள் என்னும் பாடல்கள் பாலியல் ஆய்வாளர்கள் குறிப்பிடும் சில மனநோய்களின், (fetichism, masochism) அடிப்படையில் எழுந்தனவாகவே தோன்றுகின்றன.

"விரும்பும் வகை எழுதுவதா? நாணம் கொள்ள
வேண்டாமா? தனிமையிலும் ஆடை நீக்க?"

என்று கேட்கும் ஆசிரியரே, காதலன் காதலியின் ஆடை களைதலை யும், பெண்டிரின் உள்ளூறுப்பு வண்ணனைகளையும், கட்டிலில் "கன்னி" யுடன் அடித்த கொட்டத்தையும், நயமோ, நுணுக்கமோ இன்றிக் கூறியிருப்பது வியப்புக்குரியதே! பொதுவாகவே பாடல் களில் உயர்ந்த நோக்கமோ, நல்லுணர்வோ இல்லை. 'சுரதா'

என்னும் கழிப்பறைப் புலவனைப் பின்பற்றி எழுதப்பட்டவையே 'நெருஞ்சி, நெருப்புமுச்சு, 'ஈர இரவு' போன்ற பாடல்கள். இத்தகைய பாடல்களில் எப் புதுமையும் இல்லை. கோமாளித்தனமே மேலோங்கி நிற்கின்றது. இயற்கைப் பாடல்களும் சிறக்கவில்லை.

ஆசிரியர் தமிழ் நலனில் எட்டுணையும் நாட்டம் செலுத்த வில்லை என்பது பாட்டில் மலிந்து கிடக்கும் வட சொற்களாலும் புலனுகின்றது. அங்கம், அவஸ்தை, கஷ்டம், சஹாரா, ஞான மோனம், சொர்க்கம், நயனம், நித்திரை, நிருபணம், மானசீகம், மௌனம், விசேடம், வருணம், ஜாவளி, சபதம், ஜதிஸ்வரம் என் னும் தேவையற்ற வடசொற்களைக் கையாளும் இவர் தமிழுக்கு இரண்டகம் செய்பவரே என்பதை எங்ஙனம் மறுக்க முடியும்? வையாபுரிகளைப் பற்றியும், தமிழ்ப் புலவர்களின் "விலாங்குத் தன்மை" பற்றியும் பிருண்டுக் கடிந்தெழுதியுள்ள ஆசிரியர் தம் பாடல்களை இவ்வாறு நூலாக்கியிருப்பது இவரின் விலாங்குத் தன்மையைக் காட்டுவ தாகாதா? நினைவிலும் நெஞ்சிலும் பாரதி தாசனைப் பேருருவாய்க் கொண்டிருக்கும் இவர் அவருக்குச் செய் யும் பெருமை இதுதான் போலும்! சுருங்கக் கூறின் இனிக்கும் நினைவுகள் உண்மையில் நமக்குக் கசக்கும் நினைவுகளே!

'கல்லாடன்'.

மாணவர் இந்தி எதிர்ப்பு மாநாடு!

தஞ்சை

தி. பி. 1997 – இரட்டைத் திங்கள் 4, 5, (சூன் 18,19) ஆகிய நாட்களில் தஞ்சையில் நடைபெறும்.

மாநாட்டில் மொழியியல், அரசியல், குமுகாயவியல் முதலிய பலதுறை அறிஞர்களும், மேற்கு வங்கம், கன் னடம் முதலான பிற மாநிலங்களின் மாணவ நிகராளியர் களும்; பிறரும் கலந்துகொண்டு சொற்பெருக்காற்றுவர்.

குறிப்பு :– இச் சிறப்பு மாநாட்டில் மாணவர் குமுகாயத் தின் எதிர்காலச் செயல்முறைத் திட்டம் பற்றிய இறுதி முடிவு எடுக்கப் பெறும்.

அனைவரும் வாரீர்!

அச்சக அமைப்புக் கடன் திட்டம்.

(16-4-66 முதல் 31-5-66 முடிய அலுவலகத்திற்கு வந்த தொகைகள்)

கடன்

	உருபா.	சான்றிதழ் எண்.
க. நூறு உருபா வகை:		
1. திரு. பு. கா. பாலசுப்பிரமணியம். டி. ஆர். எசு. பி. டி செயலாளர். மறைமலையடிகள் மன்றம். புண்செய்ப்புளியம் பட்டி. ஈரோடு வழி.	100-00	16.
உ. பத்து உருபாவகை:		
1. திரு. க. கணபதி. வரதராசன்பேட்டை, குறிஞ்சிப்பாடி:	10-00.	88.
2. திரு. இரா. செல்லக்குமரன். நெடுஞ்சாலைத்துறை அலுவலகம். சத்தியமங்கலம் கோவை(மா. வ)	10-00.	90.
	120-00.	

அன்பளிப்பு

வள்ளுவர் படிப்பக அன்பர்கள் ஈப்போ, மலைநாடு:

திரு சே. கதிரேசன்.	16-00
திரு. அ. தங்கராசன்.	16-00
திரு. பொ. முத்துச்சாமி.	10-00
திரு. ந. செயபாலன்.	7-00
திரு. அ. மு நடராசன்.	7-00
திரு. பொ. அரங்கசாமி.	7-00
திரு. சு. கோவேந்தன்.	7-00
திரு. மு. தங்கம்.	7-00

திரு. கி. நாகசாமி. 7–00
திரு. வீ. தங்கராசன். 7–00
திரு. அ. பெருமாள். 7–00
திரு. சோ. சண்முகம். 2–00
திரு. குறிஞ்சிக் குமரன். 2–00

தஞ்சை இளஞ்சித்திரன் வழி:

தலைக்கு 5 உருபா மேனி கொடுத்த அன்பர்கள்:

திருவாளர்கள்: பசு. பாலசுப்பிரமணியன், மன்னார்குடி. கே. எசு. அரங்கராசன் பைங்காநாடு, அ. சிவபுண்ணியம், மன்னார்குடி, எசு. அரசகோபாலன், மன்னார்குடி, கு. பாலகிருட்டினன், மன்னார்குடி, சு. ஞானசிகாமணி, மன்னார்குடி, இரா. துளசி. மாணிக்கம், சீ. அரச கோபாலன், மாதேவன்பட்டினம். ப. கோவிந்தசாமி, ஆலங்கோட்டை, கோ. இளங்கோ, மன்னார்குடி, 50–00

தலைக்கு 3 உருபா கொடுத்த அன்பர்கள்:

திருவாளர்கள். சு. கோபாலகிருட்டிணன், மன்னார்குடி, சீ. மணிவாசகம், மன்னார்குடி, இரா. கதிரேசன், மன்னார்குடி, சிவ. நடராசன், மன்னார்குடி, சாம். எக்பர்ட்டு மன்னார்குடி, த. கலியபெருமாள், கீழைநத்தம், த. சொல்லையா, மன்னார்குடி; சி. கணேசன், கண்புதம்பேட்டை அ. நாராயணமூர்த்தி, அரண்தாங்கி, (9) 27–00

தலைக்கு 2 உருபா கொடுத்த அன்பர்கள்:

திருவாளர்கள்: எ. குருமாணிக்கம், மன்னார்குடி, அ. சண்முகசுந்தரம், மன்னார்குடி; சே. நரசிம்ம இராகவன், மன்னார்குடி, வி. வரதன், மன்னார்குடி, எபிநேசர், மன்னார்குடி, இரா. செயராமன், மாதேவன் பட்டினம், ச. பால்ராசு, ஆலங்கோட்டை, க. நீலமேகம், திருப்பாலைக்குடி இராம. பத்மநாபன், மன்னை; வெ. பட்டாபிராமன், மன்னை. (10) 20–00

தலைக்கு 1 உருபா கொடுத்த அன்பர்கள்:

சாமுவேல், மன்னார்குடி. சி. நடராசன், மன்னார்குடி. தி.வி. இராமமூர்த்தி, மன்னார்குடி (3) 3–00

புன்செய்ப் புளியம்பட்டி, மறைமலையடிகள் மன்றத்தார்

மன்றச் செயலாளர் வழி:
தலைக்கு 1 உருபா மேனி விடுத்தவர்கள்:

திருவாளர்கள்: முருகையன், நம்பியூர்;
(புளியம்பட்டி அன்பர்கள்) பு. கா. பாலசுப்பிரமணியம்,
இரா. ஆறுமுகன், சு. பாலசுப்பிரமணியம்,
சுப்பையன், அருணகிரி, ஆடலரசு, அறுவை வணிகம்
மறைமலையடிகள் மன்றம்; (காவலிபாளையம்
அன்பர்கள்) கா. சு. இராமகிருட்டிணன், ஆசிரியர்,
கு. பாலசுப்பிரமணியன்; ஆசிரியர், எசரா
ஆசிரியர், கா. செ. கருப்பண்ணன் ஊராட்சி மன்ற
உறுப்பினர்; பெரியசாமி, ஊராட்சி மன்ற உறுப்பினர்;
க. கு. சண்முகம், இராமசாமி, அ. செங்கோடன்
அறுவை வாணிகம்; க. செ. பெருமாள் மளிகை
வாணிகம்; பி. சுப்பிரமணியம் அறுவை வணிகம், 18–00
திருவாட்டி: மு. இராதை, திருவில்லிப்புத்தூர் 5–00
திரு. தன. சந்திரன். (கடலூர் பயிற்சிப்பள்ளி இறுதி
யாண்டு மாணவர். உண்டியல் குலுக்கிச்
சேர்த்தது) 10–00
மதுரை தியாகராசர் கல்லூரி விடுதியின் பாரதிதாசன்,
திரு. வி. க. மன்றங்கள் சார்பில் (செயலாளர்.
திரு. இல. அரங்கராமானுசம் பி. ஏ. வழி) 14–00
திரு. குறிஞ்சித்தலைவன் (பண்ணப்பட்டி) 2–00
அவர் வழி திரு. சையது அப்துல் கபார் 2–00
திரு. முகிலன் 1–00
திரு. சுப்பையா. (மலேயா) 1–00
திருவாளர்கள்: கு. வ. கந்தசாமி, துரை. கிருட்டிண
சாமி (ஆசிரியர்கள், ஐகொந்தம். கொத்தபல்லி)
தலைக்கு 2 உருபா. 4–00
திரு. ம. இராயப்பன் நெய்வேலி–1 4–00
திருவாட்டி: சானகி அறவாழி. சேலம்–7. 10–00
பு. புளியம்பட்டி. மறைமலையடிகள் மன்றத்தார்
திருவாளர்கள்: பு. கா. பாலசுப்பிரமணியம், ஆடலரசு,
இரா. ஆறுமுகன், அருணகிரி. (தலைக்கு
ஓர். உருபா மேனி. 2–ஆம் முறை) 5–00
திரு. வி. குப்புசாமி. காட்டுசிவிரி 2–00

திரு. அ. காசிமுத்து. காட்டு சிவிரி 1
புன்செய். முரு. மூர்த்தி, பு. புளியம்பட்டி. 5
திரு. தி. ந. பாலன், திம்மராசாம்பேட்டை. 1
திரு. மா. செல்வராசன். சென்னை-1. 5
திரு. மு. கோவிந்தன், மேட்டுப்பட்டித்தாதனூர் 2
திரு. மு. அரங்கராசன் ஆசிரியர் கவித்தலம். 2
திருவாளர்கள்: இரா. வேலாயுதம், மு. இராசமாணிக்கம், ந. இராசாமணி (ஆசிரியர்கள் கவித்தலம்.)
சி. பெ நடராசன். க. கிருட்டிணமூர்த்தி (ஆசிரியர். சு: பெ. கோ) வீ. ப. க. மூர்த்தி (ஆசிரியர் திருப்பாலைத்துறை) த. மணி. (இளங்கலை) புள்ளமங்கலம் சோ. முத்துவேலு (இளங்கலை) நாகை: 8

திருச்சிராப்பள்ளி அஞ்சறகணக்கர் திரு. பழனியப்பன் வழி:

திரு. எம். நடராசன். 2
திரு. து. நாகராசன். 5
திருவாளர்கள்: த. குமரேசன், நாராயணசாமி, பெ. பாலக்கரும்பு, பார்த்தசாரதி, தி. சுப்பிரமணியன், பெ. துரைசாமி, (தலைக்கு ஓர் உருபா மேனி) 6

தஞ்சை இளஞ்சித்திரன் வழி : (2-ஆம் முறை)

திருவாளர்கள் : தெ. ஆ. அண்ணாமலை, ந. பாலகிருட்டிணன், தமிழாசிரியர்; வ, தங்கப்பிரகாசம் பி. எசி., ம. சுந்தரராசன் பி. எசி., (தலைக்கு 5 உருபா மேனி) 20
திருவாளர்கள் : இராம பாலசுப்பிரமணியன், தமிழாசிரியர், வை. காசிநாதன் தமிழாசிரியர், அ. சொக்கலிங்கம் ஆசிரியர், க. குமரசாமி ஆசிரியர், இரா. முருகையன் ஆசிரியர், செண்பக ஈசன், தமிழாசிரியர். (தலைக்கு 3 உருபா மேனி) 18
திருவாளர்கள்: எம். ஏ. அப்துல் வகாப், வணிகர்; கோ. வேங்கடாசலம் (இளைஞர் கலைமன்றம்), இராம. ஆராவமுதன் (தலைக்கு 2 உருபா மேனி) 10
திருவாளர்கள்: சந்தியாகு, ஆசிரியர்; ஆ. இருதயசாமி ஆசிரியர்; (தலைக்கு 1 உருபா மேனி) 2
திருவாளர்கள்: மொ. கம்பணன், செ. க. கண்ணுசாமி (தலைக்கு 5 உருபா மேனி) 10

உலகுதாசன், 121. ஆன்சன் பாதை, சிங்கப்பூர்–2	102
அவர்வழி திரு. எம். சந்திரன்	15
திரு. அ. குமணன்	15
திரு. ந. மாணிக்கம்	10
திரு. மா. வரதன்	10
திரு. அ. அமலதாசன்	5
திரு. ஆர். இராமச்சந்திரன்	3
திரு. உதயை. மு, வீரையன், உதயமார்த்தாண்டபுரம்	2
அவர்வழி திரு. சி. கணேசன். இராயகிரி', திரு. பா. சு. இராதாகிருட்டிணன், பாபு செட்டிப்பட்டி, (தலைக்கு 2 உருபா மேனி)	4
திருவாளர்கள்: சாமி சந்திரசேகரன், மா. குப்புசாமி, இரா. நாடிமுத்து. கா. வீரையன் (தலைக்கு ஓர் உருபாமேனி)	4
திரு பெருந்தேவன். பண்ணுருட்டி.	5
திரு. மு. துரை, ஆ. சொக்கலிங்கம், விராலிமலை	10
திரு. எம். எசு. அழகேசன் சித்திராலயா, சென்னை–17	2
திரு. ப. கு. சுப்பையன் (ஆசிரியர், நம்பியூர்) வழி	
திரு. அ. மாரிமுத்து, ஆசிரியர், சின்னசெட்டிப்பாளையம்	5
திரு. வ. இராசசேகரன், நம்பியூர்	1
திரு. இராம. இளங்கோவன் – பவானி, வெண்டா கோட்டை., தஞ்சை (தம் திருமண நினைவாக)	5

இப்பட்டியலில் வந்த தொகை விளக்கம்:

க.	**கடன் தொகை.** பத்து உருபா வகை :	20
உ.	நூறு உருபா வகை:	100
ங.	அன்பளிப்புத் தொகை	575
	மொத்தம்	695–00
	முன்மொத்தம்	5415–44
	தொகு மொத்தம்	6110–44

(தொடரும்)

மொழிப் பெரும்புலவர்

ஞா. தேவநேயப் பாவாணர்

பாடிய

இசைத் தமிழ்க் கலம்பகம்

பண் கூட்டிப் பாடுதற் கேற்ற

இந்தி எதிர்ப்புப் பாடல்கள்

விலை உருபா மூன்று

கிடைக்குமிடம் :

மணி

ஆ. 1135, 2-ஆம் மேற்குக் குறுக்குச்சாலை

காட்டுப்பாடி விரிவு (வ. ஆ.)